விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 176 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 30 திங்கட்கிழமை (13.06.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ். 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே



எவருக்கும் பதவிகள் நிரந்தரம் இல்லை

## அரசியலில் எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம் - பஸில்



(கொழும்பு)

"இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைவரத்தின்படி எந்நேரமும் எதுவும் நடக்கலாம். எவருக்கும் பதவிகள் நிரந்தரம் இல்லை." என்று பொதுஜன பெரமுன முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசியல் நிலைவரம் தொடர்பில் சிங்கள ஊடகம் ஒன்றுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"எனது சுயவிருப்பத்தின் பிரகாரமே தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜிநாமா 15

மல்லாவியில் பிறந்தநாளுக்கு சென்ற

## இளம் குடும்பஸ்தர் வெட்டிப் படுகொலை

(முல்லைத்தீவு )

முல்லைத்தீவு மாவட்டத்தின் மல்லாவி பாலிநகர் பகுதியில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் இனந் தெரியாத நபர்களினால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் பாலிநகர்ப் பகுதியில் இடம்பெற்ற பிறந்த நாள் நிகழ்வொன்றில் கலந்து கொண்டுவிட்டு திரும்பிய வேளையே குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக மல்லாவி பொலிஸார் தெரிவித் துள்ளனர்

கொலை செய்யப்பட்ட நபர் பாலிநகர்ப் பகுதியை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான அழகப்பன் அமிர்தலிங்கம் (40) 15

தொண்டைமானாறில்

## இளம் யுவதி சடலமாக மீட்பு



(யாழ்ப்பாணம்)

வடமராட்சி தொண்டைமானாறு கெருடாவில் பகுதியில் இளம் பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் விஜயராஜ் சாருஜா வயது 22 என்ற 15

குருந்தூர் மலையில் மக்களின் எதிர்ப்பால்

# புத்தர் சிலை வைக்கும் முயற்சி நிறுத்தம்

(முல்லைத்தீவு)

**வரலாற்றுத் தொன்மைவாய்ந்த முல்லைத்தீவு மாவட்டத்தின் குருந்தூர் மலையில் புத்தவிகாரை அமைக்கப்பட்டு அங்கு புத்தர் சிலை வைக்கும் முயற்சி மக்கள் எதிர்ப்பால் கைவிடப்பட்டுள்ளது.**



நீதிமன்றத் தடை உத்தரவையும் மீறி குறித்த பகுதியில் புத்தவிகாரை அமைக்கப்பட்டது.

அங்கு நேற்று புத்தர் சிலையை பிரதிஷ்டை செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு. புத்தர் சிலை சிங்கள மக்கள் வசிக்கும் பகுதிகளுக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டிருந்தது. 15

## அரச ஊழியர்களுக்கு வெள்ளி விடுமுறை

அடுத்த வாரம் முதல் அமுல்

(கொழும்பு)

அரச ஊழியர்களுக்கு வெள்ளிக்கிழமை விடுமுறை வழங்கும் வேலைத் திட்டம் அடுத்த வாரம் முதல் அமுல்படுத்தப்படும் என பொது நிர்வாக அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் தினேஷ் குண 15

## பிரதமர் வெளிப்படைத் தன்மையுடன் மக்களுடன் பேசுவது வரவேற்கத்தக்கது

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர்

(கொழும்பு)

நாடு பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் நிலையில், இப்போது புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பிரதமர்வசம் பாரிய பொறுப்பு காணப்படுகின்றது.

குறிப்பாக அவர் தற்போதைய நெருக்கடி குறித்து நாட்டுமக்களிடம் வெளிப்படையாகப் பேசுகின்றார். இவ்வாறு பிரச்சினைகள் மற்றும் அதற்குரிய தீர்வுத்திட்டங்கள் தொடர்பில் எதிர்வருங்காலங்களிலும் வெளிப்படைத் 15



எரிபொருளுக்கு இன்றுமுதல்

## பாரிய நெருக்கடி

தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில் இன்று திங்கட்கிழமை முதல் எரிபொருள் நெருக்கடி மேலும் மோசமடையும் என தொழிற்சங்கம் எச்சரித்துள்ளது.

அமைச்சர் காஞ்சன விஜேசேகரவின் புள்ளிவிபரங்களின்படி இன்னும் நான்கு நாட்களுக்கு மட்டுமே நாட்டில் டீசல் கிடைக்கும் என தொழிற்சங்க பிரதிநிதி ஆனந்த 15

## கதிரையிலிருந்து கீழே விழுந்த ஒரு வயது குழந்தை பலி

கிளிநொச்சியில் சம்பவம்

(கிளிநொச்சி)

ஒரு வயதுடைய குழந்தையொன்று கதிரையில் இருந்து கீழே வீழ்ந்து உயிரிழந்த சம்பவம் கிளிநொச்சியில் பதிவாகியுள்ளது.

இந்தச் சம்பவம் கிளிநொச்சி முழங்காவில் பகுதியில் இடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெற்றோர் குழந்தையை கதிரையில் இருத்தி விட்டு சமயலறையில் இருந்துள்ளனர். 15

## எரிவாயு விநியோகம்

சாத்தியமில்லை

(கொழும்பு)

லிட்ரோ நிறுவனத்திற்கு எரிவாயு ஏற்றி வந்த கப்பலுக்கான கட்டணத்தை செலுத்தமுடியாத நிலையில் லிட்ரோ 15

## வவுனியாவில் தொழிலாளி அடித்துப் படுகொலை

சந்தேகநபர் கைது



(வவுனியா)

வவுனியாவில் தொழிலாளி ஒருவர் அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சந்தையில் மீனின் விலை வெகுவாக அதிகரிப்பு

(கொழும்பு)

சந்தையில் மீனின் விலை வெகுவாக உயர்வடைந்துள்ளது.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மீனவர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பினால் இவ்வாறு மீனின் விலை கடுமையாக உயர்வடைந்துள்ளது.

பேலியகொடை மீன் சந்தையில் தலபாத் 2,200 ரூபாய், கொப்பரை 2,300 ரூபாய் என்ற அடிப்படையில் ஒரு கிலோ மீன் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

இதேவேளை, சந்தையில் ஒரு கிலோ பருப்பின் விலை 650 ரூபாயைத்தாண்டியுள்ளது.

பருப்புக்கான கட்டுப்பாட்டு விலையை அரசாங்கம் விதிக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ம-7)

### 21ஆவது திருத்தத்தை அமுலாக்காவிட்டால்

# சர்வதேசத்தின் அதிருப்திக்கு இலங்கை ஆளாக நேரிடும்

## சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு



(கொழும்பு)

அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தம் ஜூலை மாதத்துக்குள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டுமென்று தெரிவித்த பாரளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், ஒட்டுமொத்த சர்வதேச சமூகத்தின் அதிருப்திக்கு இலங்கை ஆளாக நேரிடும் என்றும் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் சுட்டிக்காட்டினார்.

தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல்களின் அடிப்படையில் இந்த திருத்தம் நிறைவேற்றப்படுவதை தான் விரும்பவில்லை என தெரிவித்த அவர், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் சில அதிகாரங்களை பாராளுமன்றத்துக்கு மாற்ற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

உத்தேச திருத்தங்கள் எதிர்வரும் வாரத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு ஜூலை மாதத்துக்குள் நிறைவேற்றப்பட வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் ரணவக்க குறிப்பிட்டுள்ளார்.

அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தத்தை ஒத்திவைப்பதன் மூலம் அரசியல் ஸ்திரமின்மை மற்றும் பொருளாதார நெருக்கடி மோசமடையும் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

# இலங்கையின் அபிவிருத்திக்கு சீனா தொடர்ந்து உதவி

(கொழும்பு)

இலங்கையின் அபிவிருத்திக்காக சீனா தொடர்ந்தும் உதவி வழங்க முன்வந்துள்ளது.

கடன் சுமையில் தளர்வை ஏற்படுத்துவதற்கும் அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு இலங்கையுடன் தொடர்ந்து செயற்படத் தயாராக இருப்பதாக சீன அரசாங்கம் தெரிவித்துள்ளது.

சீனாவின் வெளிநாட்டு அமைச்சின் ஆசிய அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் லியு ஜின்சோன் மற்றும் சீனாவுக்கான இலங்கைத் தூதுவர் கலாநிதி பாலித கொஹன ஆகியோருக்கு இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# பா.ஜ.க இலங்கைக்குள் நுழைந்துவிட்டது - ராகுல்



(டில்லி)

மன்னார் காற்றாலை மின் உற்பத்தி திட்டத்தை இந்தியாவின் வணிக அதிபரான கௌதம் அதானிக்கு சொந்தமான அதானி கிரீன் எனர்ஜி நிறுவனத்திற்கு வழங்கும் திட்டம் பற்றி அதிகம் பேசப்படுகிறது.

இந்நிலையில் இலங்கை மின்சார சபையின் தலைவர் பாராளுமன்றத்தில் பொது நிறுவனங்களுக்கான குழுவிற்கு (கோப்) அறிவித்தார், "2021 நவம்பர் 24 அன்று கூட்டத்திற்கு வருமாறு ஜனாதிபதி என்னைக் கேட்டு, இந்த திட்டத்தை அதானி குழுமத்திற்கு வழங்குமாறு என்னிடம் கூறினார், மேலும் இந்தியப் பிரதமர் அவ்வாறு செய்யுமாறு மோடி அவருக்கு அழுத்தம் கொடுக்கிறார்.

இந்த விவகாரம் குறித்து கருத்து தெரிவித்த காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் ராகுல் காந்தி ராகுல் காந்தி, "பாஜக குத்துச்சண்டை தற்போது பாக் ஜலசந்தியைக் கடந்து இலங்கைக்குள் நுழைந்துள்ளது" என்று கூறியுள்ளார். (ம-7)

### மறைத்து வைக்கப்பட்டிருந்த

# 540 எரிவாயு சிலிண்டர்கள் அநுராதபுரத்தில் கண்டுபிடிப்பு

(அநுராதபுரம்)

அநுராதபுரம், சாலிய மாவத்தை பிரதேசத்தில் எரிவாயு முகவர் ஒருவருக்கு சொந்தமான களஞ்சியசாலையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 540 எரிவாயு சிலிண்டர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் அதிகாரிகளினால் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வீட்டு உபயோக எரிவாயு சிலிண்டர்கள் தவிர, 54 வெற்று எரிவாயு சிலிண்டர்களும் கண்டுபிடிக்கப்பட்டன.

நேற்றுக் காலை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே குறித்த எரிவாயு சிலிண்டர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கண்டுபிடிக்கப்பட்ட எரிவாயு சிலிண்டர்களை பொதுமக்களுக்கு விநியோகிக்க நுகர்வோர் அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இதேவேளை, சம்பந்தப்பட்ட எரிவாயு முகவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது. (ம-7)

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தில் தாபனக்கிளையில்
கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்
திருமதி **திவாஸ்கர் சதீஷா** அவர்களின்
அன்புத் தாயார்

### அமரர் கிருஷ்ணமூர்த்தி செல்வமலர்

தோற்றம்: 1964.01.27 மறைவு: 2022.06.11

அவர்கள் 11.06.2022 அன்று
காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*துயர் பகிர்வில்:*

**பிரதேச செயலரும் அனைத்து உத்தியோகத்தர்களும்**
**ஊழியர் நலன்புரிச் சங்கம் பிரதேச செயலகம், பருத்தித்துறை.**

(C-4487)

## மரண அறிவித்தல்

### திருமதி கனகாம்பிகை இரத்தினசபாபதி
### (ஓய்வுநிலை ஆசிரியை)



*காங்கேசன்துறை கல்லூரி வீதியை பிறப்பிடமாகவும் கனடா Scarboroughஐ வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகாம்பிகை இரத்தினசபாபதி அவர்கள் 09.06.2022 அன்று சிவபதமடைந்தார்.*

*அன்னார் காலஞ்சென்ற சுப்பையா - தில்லையம்மா தம்பதியரின் ஏகபுதல்வியும் காலஞ்சென்ற கார்த்திகேசு இரத்தினசபாபதியின் (ஓய்வுநிலை ஆசிரியர்) பாசமிகு மனைவியும் கலாநிதி ஸ்ரீதரன் (கனடா), ஸ்ரீமதி (இணுவில்), மலர்மதி (ஓய்வுநிலை ஆசிரியை), கிரிதரன் (கனடா) மற்றும் வசுமதி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் றஞ்சனா (கனடா), காலஞ்சென்ற சிதம்பரேஸ்வரன் (ஓய்வுநிலை நூலகர்), பாலகிருஷ்ணன் (ஓய்வுநிலை அதிபர்), கௌசல்யா (கனடா) மற்றும் பிரதீஷ் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் றஜீஸ் (கனடா), தட்சயன் (உரும்பிராய்), நிலானி (கனடா), மாதங்கி (உரும்பிராய்), பவித்தா (கனடா), ஆரணி (கனடா), ஹரீஷ் (கனடா), ஹனூஸ் (கனடா), சுமுகா (இணுவில்) மற்றும் அஷ்மிதா (கனடா) ஆகியோரின் பேர்த்தியும் ருவைலாவின் (கனடா) பாசமிகு பூட்டியுமாவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.06.2022) இரவு 5.30 மணி தொடக்கம் 9.00 மணிவரை (இலங்கை நேரப்படி)* Ajax Crematorium & Visitation Centre, 384, Finley Ave, Ajax ON LIS 2E3 Canada *இல் நடைபெறும்..*

*இவ்வறிவித்தலை உற்றார்; உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.*

*தொடர்புகளுக்கு:*
**ஸ்ரீமதி (மகள் - இணுவில்)**
**+94779383957**
**மலர்மதி (மகள் - உரும்பிராய்) -**
**+94778323848**

(C-4488)

*தகவல் -*
**குடும்பத்தினர்**
**ஸ்ரீதரன் - +14164283702 (கனடா)**
**கிரிதரன் - +14169394906 (கனடா)**
**வசுமதி - +14168239395 (கனடா)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## — I.M.F நிதி கிடைக்காததால் —

# ரஷ்யா, சீனாவின் உதவிகளை கோரவுள்ள பிரதமர் ரணில்

(கொழும்பு)

**சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து ஒக்டோபர் மாதம் வரை இலங்கைக்கு கடன் கிடைக்க வாய்ப்பில்லை. இருப்பினும் ஏனைய நட்பு நாடுகளிடமிருந்து நிதியைப் பெறுவதற்கு முயற்சிப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**



இலங்கையில் ஏற்பட்டுள்ள தற்போதைய நெருக்கடியானது தவறான நிர்வாகம், வரி குறைப்பு மற்றும் உரப்பிரச்சினை போன்றவற்றின் காரணமாக ஏற்பட்டது என பிரதமர் தெரிவித்தார்.

இருப்பினும் கொரோனா தொற்று மற்றும் ரஷ்யா – உக்ரேன் யுத்தம் காரணமாக இந் நிலைமை மிக மோசமடைந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியை சமாளிக்க ரஷ்யாவிடம் இருந்து அதிக எரிபொருளை கொள்வனவு செய்வதற்கு தான் தீர்மானித்துள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கை தற்போது பல நாடுகளின் உதவியை நாடியுள்ள நிலையில், சீனாவிடம் இருந்து மேலும் நிதி உதவிகளை ஏற்கத் தயாராக உள்ளதாகவும் ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

உக்ரைன் நெருக்கடியின் தாக்கம் காரணமாக இவ்வருட இறுதிக்குள் உலகளவில் உணவுப் பற்றாக்குறை ஏற்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எச்சரித்தார்.

பொருளாதார மீட்சிக்கு தேவையான திட்டங்கள் என்னவென்பதை அடையாளம் காண்பதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார். (4)

# திறந்த கணக்கு முறைக்கு விதிக்கப்பட்ட தடை நீக்கம்

(கொழும்பு)

கடந்த இரண்டு மாதங்களாக தடை விதிக்கப்பட்டிருந்த "திறந்த கணக்கு முறை" யை அரசு நிபந்தனையுடன் நீக்கியுள்ளது.

இதன் காரணமாக இலங்கையின் வர்த்தகர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படவுள்ளனர்.

திறந்த கணக்கு என்பது ஒரு வெளிநாடுகளில் உள்ள ஏற்றுமதியாளருக்கும் உள்நாட்டில் உள்ள இறக்குமதியாளருக்கும் இடையிலான நம்பிக்கையின் அடிப்படையில் ஏற்படுத்திக் கொள்ளப்படும் ஒரு ஏற்பாடாகும்.

இதன் கீழ் நாணயக்கடிதம் அல்லது டெலிகிராப் ட்ரான்ஸ்பர் என்பதற்கு அப்பால் ஏற்றுமதியாளர்களும், உள்நாட்டில் (இலங்கையில்) உள்ள இறக்குமதியாளர்களும் வங்கிகளுக்கு ஊடாக தமது கொடுப்பனவு மற்றும் பெறுதல்களை மேற்கொள்ளமுடியும்.

இதன்படி வாடிக்கையாளர் ஒத்திவைக்கப்பட்ட (பிற்போட்டப்பட்ட) கட்டண அடிப்படையில் பொருட்களையும் சேவைகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.

வர்த்தகர்கள் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை கடந்த வியாழக்கிழமை சந்தித்ததை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கொள்கை மாற்றத்தை இறுதி செய்வதற்காக, பிரதமர் நேற்று முன்தினம் மத்திய வங்கி ஆளுநர் மற்றும் ஏனைய அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

திறந்த கணக்கு முறையின் மூலம் இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படும் பொருட்களில் சிவப்பு அரசி, நாடு மற்றும் சம்பா, கோதுமை மா, சர்க்கரை, முழு உளுத்தம் பருப்பு, மஞ்சள் முழு பருப்பு, மஞ்சள் சிவப்பு பட்டாணி, காய்ந்த மிளகாய், கொண்டைக்கடலை, கொத்தமல்லி, சீரகம், பெருஞ்சீரகம் மற்றும் கடுகு விதைகள் என்பன அடங்குகின்றன. (4)

# 173 கைதிகளுக்கு பொது மன்னிப்பு

(கொழும்பு)

பொசன் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு 173 கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு மறு சீரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி சட்டத்தரணி அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷவின் பரிந்துரையின் பேரில் கைதிகளுக்கு மன்னிப்பு வழங்கப்படவுள்ளது.

அதற்கமைய அதிகபட்சமாக 23 கைதிகள் வெலிக்கடை சிறைச்சாலையில் விடுதலை செய்யப்படவுள்ளனர்.

மேலும் குருவிட்ட, மஹர, நீர்கொழும்பு, வீரவில, வாரிய பொல, போகம்பர, அநுராதபுரம், களுத்தறை, கொழும்பு மகசின் சிறைச்சாலை, கேகாலை, மட்டக்களப்பு, மொனராகலை, பல்லான்யா, யாழ்ப்பாணம், திருகோணமலை மற்றும் யாழ்ப்பாண சிறைச்சாலை சிறைக் கைதிகளுக்கும் இவ்வாறு பொது மன்னிப்பு வழங்கப்படவுள்ளது. (4)

# பாடசாலை நாட்கள் குறைக்கப்பட மாட்டாது

## கல்வி அமைச்சர்

(கொழும்பு)

பாடசாலை நாட்களை குறைப்பதற்கான எதிர்பார்ப்பு இல்லை என கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

எரிபொருள் தட்டுப்பாடு காணப்பட்டாலும் பாடசாலைக்கு வரும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் வருகை சிறந்த அளவில் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே, எரிபொருள் நெருக்கடியுடன் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு மத்தியில் ஆசிரியர்களையும் மாணவர் களையும் இரண்டு பிரிவுகளாக பிரித்து, வாரத்துக்கு தலா மூன்று தினங்கள் பாடசாலைக்கு அழைப்பதற்கு அதிபர் - ஆசிரியர் தொழிற்சங்க ஒன்றியம் கல்வி அ[illegible] யோசனை முன்[illegible] தமை குறிப்பிடத்தக்கது. (4)

# நாட்டை ஐந்து வருடங்களுக்குள் நிச்சயம் கட்டியெழுப்புவோம்

## எதிர்க்கட்சி தலைவர்

(கொழும்பு)

"ராஜபக்ஷக்களால் சீரழிக்கப்பட்ட எமது நாட்டை உண்மையான மக்கள் ஆதரவுடன் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணி என்பன இன்னும் ஐந்து வருடங்களுக்குள் நிச்சயமாகக் கட்டியெழுப்பும்" என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

புவக்பிட்டிய பென்ரிக் தோட்ட [illegible] நிகழ்வில் நேற்று முன்தினம் கலந்துகொண்டு உரை யாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, "அரசு மக்கள் அபிப்பிராயத்தை அப்பட்டமாக மீறி, அதைக் கிடப்பில் போட்டது. மக்களுக்குத் துரோகம் செய்து நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது.

தோல்வியடைந்த அரசு இன்று ஆடைகளை மாற்றிய வண்ணம், ஒவ்வொரு நபர்களை மாற்றி அதிகாரத்தை உறுதிப்படுத்த முயன்றாலும், இதிலிருந்து இந்நாட்டின் அழிவுப் பாதை நிற்காது.



புதிய மக்கள் அபிப்பிராயத்தின் மூலம் இந்நாடு கட்டியெழுப்பப்பட வேண்டும். நிலையற்ற தன்மைகளால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது" எனத் தெரிவித்தார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துக்களின் பெரும்சமர் சமநிலையில் முடிவு




இந்துக்களின் பெரும்சமர் என அழைக்கப்படும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் கொழும்பு பம்பலப்பீட்டி இந்துக் கல்லூரிக்குமிடையிலான 11 ஆவது துடுப்பாட்ட போட்டி நேற்று முன்தினம் சமநிலையில் முடிவுற்றது. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டிகள் தொடர்ச்சியாக இரண்டு நாட்கள் இடம்பெற்றன.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடியது. அதன்படி முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் இந்துக் கல் லூரி அணி 59.2 ஓவர்கள் நிறைவில் இனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 230 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கொழும்பு இந்துக் கல்லூரி அணி 56 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றது.

84 ஓட்டங்கள் முன்னிலையில் இருந்த யாழ். இந்துக்கல்லூரி இரண்டாம் இன்னிங்ஸில் 29 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 117 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை இடைநிறுத்தியது. இரண்டாம் இன்னிங்ஸிக்காக துடுப்பெடுத்தாடிய கொழும்பு இந்துக் கல்லூரி 31 ஓவர்கள் துடுப்பெடுத்தாடி 8 விக்கெட்டுகளை இழந்து 67 ஓட்டங்களைப் பெற்றது. இதன் மூலம் 11ஆவது இந்துக்களின்பெரும்சமர்வெற்றி தோல்வி இன்றி சமநிலையில் முடிவுற்றது.(4-6-33)

# நீலங்களின் சமர் சமநிலையில் முடிவு




கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய அணிக்கும் கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணிக்கும் இடையிலான வடக்கு நீலங்களின் சமர் வெற்றி தோல்வியின்றி நேற்று முன்தினம் சமநிலையில் நிறைவுற்றது.


குறித்த போட்டியில் தமது முதலாவது இன்னிங்ஸிற்காக கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம் 50.2 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 181 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தனர்.

பதிலுக்கு தமது முதலாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி 52.5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 140 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தனர்.

பதிலுக்கு தமது இரண்டாவது இனிங்ஸிற்காக துடுப்பெடுத்தா்டிய மத்திய மகா வித்தியாலய அணியினர் 26.5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 158 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுகளை இழந்திருந்த வேளை தமது ஆட்டத்தை இடைநிறுத்து வதாகக்கூறி 200 ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயித்திருந்தனர். 200 என்னும் வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி 36 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 108 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது. இதனால் போட்டி வெற்றி தோல்வி இன்றி சமநிலையில் முடிவுற்றது. (4-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2636

### தாட்சா




### பவிஷா




### சாரங்கள்




### வினு




### கௌரி




### கிருஷ்ணன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரத்தில் ஒருமுறை மாத்திரம் எரிபொருள் விநியோகிக்க திட்டம்

(கொழும்பு)

**நாட்டின் தற்போதைய எரிபொருள் நிலைமையை நிவர்த்தி செய்வதற்கு எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நுகர்வோரை பதிவு செய்து அவர்களுக்கு உத்தரவாதமான வாராந்த ஒதுக்கீட்டை வழங்குவதைத் தவிர வேறு வழியில்லை என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.**



இது குறித்து அமைச்சர் தெரிவித்துள்ளதாவது,

தடையில்லா மின்சாரம் மற்றும் நிலையான எரிபொருள் விநியோகம் இருக்கும் வரை, எரிபொருள் வரிசை சாத்தியமற்றது.

நிதிப்பிரச்சினைகள் உள்ள நிலையில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஒரு வாரத்திற்கு நிர்வகிக்க எரிபொருளை இறக்குமதி செய்கிறது. ஆனால் சில நுகர்வோர் தங்கள் இயந்திரங்கள் மற்றும் ஜெனரேட்டர்களுக்காக ஒரு மாதம் அல்லது அதற்கும் மேலாக எரிபொருளை சேகரிக்கின்றனர்.

நிதி நிலைமையை வலுப்படுத்தி, 24 மணிநேர மின்சாரம் மற்றும் நிலையான எரிபொருள் விநியோகத்தை மீட்டெடுக்கும் வரை, நுகர்வோர்களை எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பதிவு செய்து அவர்களுக்கு உத்தரவாதமான வாராந்திர ஒதுக்கீட்டை வழங்குவதைத் தவிர வேறு வழியில்லை. ஜூலை முதல் வாரத்தில் இது நடைமுறைக்கு வரும் என நம்புகிறேன் எனக் குறிப்பிட்டுள்ளார். (4)

## நெருக்கடிக்கு காரணமானவர்களை அரசு பாதுகாக்கிறது

### அநுர சுட்டிக்காட்டு

(கொழும்பு)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு காரணமான தரப்பினரை வெளிப்படுத்த அரசாங்கம் தவறிவிட்டது என தேசிய மக்கள் சக்தி குற்றம் சாட்டியுள்ளது.

பொலன்னறுவையில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றிய போதே அக்கட்சியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமாரதிஸாநாயக்க மேற்கண்டவாறு கூறினார்.

நெருக்கடி குறித்து அரசாங்கம் அவ்வப்போது அறிக்கைகளை வெளியிட்டு வருகின்ற போதிலும், முக்கிய நபர்களை மக்களுக்கு அறிவிக்கவில்லை என அவர் தெரிவித்தார்.

உணவு நெருக்கடி, கடின மான காலங்கள் வரவுள்ளதாக ஆட்சியாளர்கள் எச்சரித்த போதிலும், நெருக்கடிகளுக்குப் பின்னால் உள்ள தனிநபர்கள் பாதுகாக்கப்படுவதாக அவர் தெரிவித்தார். (4)




## இராசிபலன்

13.06.2022
வைகாசி 30, திங்கட்கிழமை
சதுர்த்தசி முன்னிரவு 8.12 மணிவரை

அனுசம் முன்னிரவு 8.55 மணிவரை
சுபநேரம் -11.52-1.22 மணிவரை
இராகுகாலம் -7.22-8.52 மணிவரை

வற்றாப்பளை கண்ணகி பொங்கல்
சந்திராஷ்டமம்-அச்சுவினி, பரணி

வளவன்

**மேஷம்** — மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, பிரயாண பயமுண்டு.

**கடகம்** — சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**துலாம்** — விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், எதிர்பாராத தன வரவுகள் வந்து சேரலாம்.

**மகரம்** — இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள், காரிய அனுகூலமுண்டு.

**ரிஷபம்** — ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், தொழில் சிறப்புக்கள் வந்து சேரலாம், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**சிம்மம்** — சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வாகன சுகமுண்டு.

**விருச்சிகம்** — வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும் நாள், குடும்பத்தினர் உங்களின் குணமறிந்து நடந்து கொள்வர், வழிபாடு குதூகலம் தரும், காரிய அனுகூலமுண்டு.

**கும்பம்** — நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள் எதிர்கால நலன் கருதி தீட்டிய திட்டங்கள் கைகூடும்.

**மிதுனம்** — கூட்டுத் தொழிலில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கலாம், தன்னம்பிக்கையும், தைரியமும் அதிகரிக்கும், வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள்.

**கன்னி** — குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் அகலும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.

**தனுசு** — திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், சுப விரயங்களில் தாராளம் காட்டுவீர்கள், தேவையற்ற மனக்குழப்பங்களைத் தவிர்த்துக் கொள்வது நல்லது.

**மீனம்** — வரவேண்டிய பாக்கிகள் வந்து சேரலாம், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், அன்பால் சாதித்துக் காட்டும் நாள், பயணங்களால் பலனுண்டு.

மூளையை நா முந்தவிடாதே சிந்திக்காமல் பேசாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகமூடி கொள்ளை கும்பலினால் வீடுபுகுந்து 10 பவுண் நகை திருட்டு

## வீட்டிலிருந்தவர்கள் மீது வாள்வெட்டு

(யாழ்ப்பாணம்)
வாள்களுடன் வீடொன்றினுள் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை நுழைந்த முகமூடி கொள்ளை கும்பல் ஒன்று வீட்டில் இருந்தவர்கள் மீது தாக்குதலை மேற்கொண்டு விட்டு நகைகளை கொள்ளையிடித்து தப்பித்துச் சென்றுள்ளனர்.

கொள்ளையர்களின் தாக்குதலுக்கு இலக்கான 2 ஆண்கள் மற்றும் பெண் ஒருவர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, கடந்த சில தினங்களுக்கு முன்னர் குறித்த வீட்டில் பூப்புனித நீராட்டு விழா நடைபெற்றுள்ள நிலையில் நேற்று அதிகாலை வேளை முகங்களை மறைத்தவாறு, வாள்களுடன்வீடை உடைத்து உள்நுழைந்த கொள்ளை கும்பல் வீட்டில் இருந்தவர்கள் மீது வாள்வெட்டினை மேற்கொண்டு, ஏனையவர்களை வாள் முனையில் அச்சுறுத்தி வீட்டில் இருந்தவர்கள் அணிந்திருந்த 10 பவுண் நகைகளை கொள்ளையடித்து தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பருத்தித் துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (4-6-33)

# உரும்பிராயில் விபத்து இருவர் படுகாயம்



(யாழ்ப்பாணம்)
யாழ்.உரும்பிராய் சந்தியில் நேற்று முன்தினம் மாலை மோட்டார் சைக்கிளும் - பேருந்தும் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து புன்னாலைக்கட்டுவன்நோக்கி பய ணித்த தனியார் பேருந்து கோப்பாய் - மானிப்பாய் வீதியில் உரும்பிராய் சந்தியில் சடுதியாக வீதியை கடக்க முயற்சித்த மோட்டார் சைக்கிள் மீது மோதியுள்ளது.

சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸ் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-6-33)

# வதிரி தேவரையாளி பகுதியில் மர்ம மனிதர்கள் நடமாட்டம்

## அச்சத்தில் மக்கள்

(கரணவாய்)
கடந்த வெள்ளிக்கிழமை வதிரி தேவரையாளி பகுதியில் திருடன் ஒருவர் வீட்டிற்குள் உட்புகுந்ததையடுத்து அப்பகுதியில் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

இச்சம்பவம்தொடர்பில்மேலும் தெரியவருவது,

வதிரிதேவரையாளி இந்துக் கல்லூரிக்கு பின்பக்கம் இரவு 9 மணி அளவில் திருடன் ஒருவர் ஒரு வீட்டின் ஆட்டுக் கொட்டில் பக்கமாக நின்றதாகவும், கண்டவர்கள் கூஞ்சலிட தப்பித்து ஓடியதாகவும் தெரிய வந்துள்ளது.

குறித்த நபர் முகத்தில் துணி கட்டியபடி, உயரமான மனிதராக உள்ளதாக நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் அப்பகுதி கிராம மக்கள் அனைவரும் சேர்ந்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

சிலர் ஆங்காங்கே விசில் சத்தம் கேட்பதாகவும், இது அவர்களின் குழுக்குறியாக இருக்கலாம் எனவும் ஒரு திருடன் அல்ல பலபேர் தொடர்பு பட்டிருக்கலாம் எனவும் அப்பகுதி மக்கள் சந்தேகிக்கின்றனர்.

சில நாட்களுக்கு முன் இதற்கு அருகாமையில் உள்ள கிராமத்தில் உறங்கிக் கொண்டிருந்த 4 வயதுச் சிறுமியை கடத்த முற்பட்ட சம்பவம் அண்மையில் நடைபெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. (4-6-60)

# விபத்து தொடர்பில் சந்தேகநபர் கைது

(கரணவாய்)
நெல்லியடி பகுதியில் கடந்த 26 ஆம் திகதி இடம்பெற்ற விபத்திற்கு காரணமாக இருந்த சந்தேக நபர் ஒருவரை நெல்லியடி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த சம்பவம் நெல்லியடி நகரப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

முன்னே சென்ற துவிச்சக்கர வண்டி சடுதியாக வலப்பக்கம் திரும்பிய போது பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளாகியது.

சம்பவத்தில் படுகாயமடைந்த நபர் சுயநினைவிழந்த நிலையில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு சுயநினைவின்றி சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்நிலையில் விபத்து ஏற்பட காரணமாக இருந்த கரவெட்டி பகுதியைச் சேர்ந்த சந்தேக நபர் ஒருவரை நேற்று முன்தினம் சனிக்கிழமை நெல்லியடி பொலிஸார் கைது செய்துள்ளனர். (4-6-60)

# சமூக விஞ்ஞான படிப்பு வட்டத்தின் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)
உள்ளூர் உற்பத்திக்கான செயலூக்கமும் அரசமைப்பு மாற்றத்திற்கான விழிப்புணர்வும் என்ற தலைப்பிலான சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் விசேட கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை மாலை 4 மணியளவில் கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தியில் உள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் விசேட உரையினை பொதுவுடமைச் செயற்பாட்டாளரான சி.கா.செந்திவேல் அவர்கள் ஆற்றவுள்ளார். தொடர்ந்து சபையோர் கருத்துரைகளுடன் திறந்த கலந்துரையாடல் இடம் பெறும். ஆர்வமுள்ள அனைவரையும் கலந்துகொள்ளுமாறு சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தினர் அழைப்பு விடுக்கின்றனர். (4)

## கட்டுவன் வீரபத்திர பெருமான் ஆலய மகா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)
தென் மயிலை கட்டுவன் காளிகா சமேத வீரபத்திர பெருமான் ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை காலை 6.05 மணிக்கு இடம்பெறவுள்ளது என தேவஸ்தான பரிபாலன சபைத் தலைவர் நா.சண்முகலிங்கன் அறிவித்துள்ளார். (4)

# எழுதுமட்டுவாழில் ரயில் கடவை காவலாளியின் வீடு விசமிகளால் சேதம்



(சாவகச்சேரி)
கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட எழுதுமட்டுவாழ் பகுதியில் அமைந்துள்ள ரயில் கடவை காவலாளியின் கொட்டில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு இனந்தெரியாத நபர்களால் சேதமாக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த கொட்டிலில் காவலாளி இல்லாத சமயம் இரவு வேளையில் இனந்தெரியாத நபர்கள் சேதப்படுத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (4-6-30)

# யாழில் விற்பனை நிலையங்களில் விசேட பரிசோதனை நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாண மாவட்ட செயலரின் பணிப்புரையின் [illegible] மாவட்ட பாவனையாளர் [illegible] அதிகாரசபையினர் மற்றும் பொலிஸாரும் இணைந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை பல்பொருள் அங்காடி, மொத்த வியாபார நிறுவனங்களில் பரிசோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

மேலும், தொடர்ச்சியாக வியாபார நிலையங்களில் பரிசோதனை, கண்காணிப்பு நடவடிக்கைகள் நடைபெறுமென மாவ[illegible] (4-6-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முறையான தீர்வினை ரணில் இதுவரை முன்வைக்கவில்லை

## பெரமுன குற்றச்சாட்டு

(கொழும்பு)

**பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்பதற்காகவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கியதாகவும் இருப்பினும் அதற்கு முறையான தீர்வினை அவர்கள் முன்வைக்கவில்லை என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.**

அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ பாராளுமன்ற உறுப்புரிமையை இராஜினாமா செய்தமை தொடர்பாக வினவிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முக்கிய பதவிகள் எதிர்வரும் நாட்களில் மறுசீரமைக்கப்படும் எந்த தேர்தல் இடம்பெற்றாலும் அதனை எதிர்கொள்ள தயார்.

பாரிய எதிர்பார்ப்பிற்கு மத்தியில் பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்திற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவை வழங்கி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் ஆட்சியை நாட்டு மக்கள் ஏற்படுத்தினார்கள்.

ஆனால் கடந்த இரண்டு வருட காலமாக கொரோனா தொற்றை கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்த போதும் அரசாங்கத்தில் இருந்து கொண்டு பலவீனப்படுத்தும் வகையில் ஒரு சிலர் செயற்பட்டதால் அரசியல் நெருக்கடி தீவிரமடைந்தது.

ஒரு தனி நபரை இலக்காகக் கொண்டு மட்டுமே 21ஆவது திருத்தச் சட்டமூலம் உருவாக்கப்பட்டது என்றும் இருப்பினும் இதற்கு எதிராகவே தமது கட்சி வாக்களிக்கும் என்றும் சாகர காரியவசம் தெரிவித்தார். (4)

# அமெரிக்கா செல்ல தயாராகும் பசில்



இருவரும் இரட்டைக் குடியுரிமை பெற்றவர்கள்.

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் பதவியை கடந்த வியாழக்கிழமை இராஜினாமா செய்த முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ விரைவில் அமெரிக்கா செல்ல தயாராகி வருவதாகத் தெரியவருகிறது.

இந்நிலையில் எம்.பி. பதவியை இராஜினாமா செய்த உடனேயே செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசிய பசில் ராஜபக்ஷ, தானும் தனது மனைவியும் அமெரிக்காவிற்கு அடிக்கடி பயணம் செய்வதாக கூறினார்.

எங்களின் குடும்பம் - குழந்தைகள் மற்றும் பேரக் குழந்தைகள் அமெரிக்காவில் வசிப்பதால் அடிக்கடி அங்கு சென்று வருவதாக அவர் கூறினார். பசில் ராஜபக்ஷ மற்றும் அவரது மனைவி இருவரும் இரட்டைக் குடியுரிமை பெற்றவர்கள்.

எனினும் தனது கட்சியை பலப்படுத்தும் பணியில் தொடர்ந்து ஈடுபட உள்ளதாக கூறினார்.

அத்துடன், மக்கள் கோரினால் நான் மீண்டும் தீவிர அரசியலுக்கு வருவேன் என்றும் எனது விலகல் நிரந்தரமாக இருக்காது எனவும் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார். (4)

# அமெரிக்காவின் தேவைக்காகவே ரணில் செயற்படுகிறார்

## திஸ்ஸ குற்றச்சாட்டு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தற்போதும் அமெரிக்காவின் தேவைக்காக செயற்படுகிறார் என பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரன தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கம் பிரச்சினைகளை குறிப்பிடுகிறதே தவிர நடைமுறைக்கு சாத்தியமான தீர்வினை முன்வைக்கவில்லை என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

சமகால அரசியல் நிலவரம் குறித்து கருத்து வெளியிட்ட அவர், பசில் ராஜபக்ஷ பாராளுமன்ற உறுப்புரிமையை இரத்து செய்தமை பிறிதொரு அரசியல் நாடகம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண வேண்டும் என்ற காரணத்திற்காக கட்சி அடிப்படையில் பிரதமர் தலைமையிலான அரசாங்கத்திற்கு ஒரு சில விடயங்களுக்கு ஆதரவு வழங்கியதாகவும் திஸ்ஸ விதாரன குறிப்பிட்டார்.

இருப்பினும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் செயற்பட்டதை போன்று தற்போதும் அமெரிக்காவின் தேவைக்கமைய செயற்படுகிறார் என திஸ்ஸ விதாரன குற்றம் சாட்டினார். (4)

# இருவேறு பகுதியில் நீரில் மூழ்கி மூவர் உயிரிழப்பு!

(கொழும்பு)

தம்புத்தேகம லுனுவெவயில் நீராடச் சென்ற இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அஹங்கல்ல பகுதியிலிருந்து யாத்திரிகர்கள் குழுவொன்று அநுராதபுரத்திற்கு புனித யாத்திரை சென்று திரும்பிக் கொண்டிருந்த போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர்கள் அஹங்கல்ல பகுதியைச் சேர்ந்த 19 வயது மற்றும் 27 வயதுடையவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை, பாதுக்க, உடகம்கந்த பிரதேசத்தில் உள்ள நீர்வீழ்ச்சியில் குளிப்பதற்குச் சென்ற இருவரில் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் 54 வயதுடைய பாதுக்க, போபே பகுதியைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். (4)


# வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் ஆதனப் பெயர் மாற்றம் 30, பண்ணாகம் வீதி, வட்டாரம்-12

வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் உப அலுவலகம் எல்லைக்குட்பட்ட வட்டாரம் 12 பண்ணாகம் வீதி, இல. 30 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் **சொந்தக்காரர்** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தில் ஒரு பகுதியினை **மாரிமுத்து பரமகுரு** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு தா. சங்கரப்பிள்ளை முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1822/03.08.1950ம் இலக்க உறுதியால் **மாரிமுத்து இரத்தினசபாபதி** ஆகியவரிடமிருந்து நன்கொடையாக பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார். குறித்த உறுதியில் அடி உறுதி பற்றிய விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை. குறித்த **மாரிமுத்து பரமகுரு** காலஞ்செல்ல குறித்த ஆதனம் அவரின் வாரிசுகளான **பரமகுரு சற்குரு, பரமகுரு இராசகுரு** ஆகியோருக்கு முதுசமாக வந்தடைந்தது.

**அருணாசலம் இராஜா பெண் ஆச்சிப்பிள்ளை** ஆகியவர் குறித்த முழு ஆதனத்தில் சொரியலாக 1/8 பங்கிற்கு பிரசித்த நொத்தாரிசு P.கணபதிப்பிள்ளை முகதாவில் நிறைவேற்றப்பட்ட 4758/10.08.1940ம் இலக்க உறுதியால் **இராமலிங்கம் மாணிக்கம்** ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**அருணாசலம் இராஜா பெண் ஆச்சிப்பிள்ளை** ஆகியவர் குறித்த முழு ஆதனத்தினை பிரசித்த நொத்தாரிசு P.கணபதிப்பிள்ளை முகதாவில் நிறைவேற்றப்பட்ட 6596/29.05.1954ம் இலக்க உறுதியால் **இராமலிங்கம் செல்வதுரை** ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**கந்தையா எதிர்மன்னசிங்கம் பெண் சரஸ்வதி** ஆகியவர் குறித்த ஆதனத்தினை பிரசித்த நொத்தாரிசு P. கணபதிப்பிள்ளை முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2104/16.01.1959ம் இலக்க உறுதியால் குறித்த **அருணாசலம் இராஜாவும் பெண் ஆச்சிப்பிள்ளையும்** ஆகியவர்களிடமிருந்து சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த ஆதனத்தின் ஒரு பகுதியினை குறித்த **கந்தையா எதிர்மன்னசிங்கம் பெண் சரஸ்வதி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு ச.வை. சோமசுந்தரம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 7097/13.06.1965ம் இலக்க உறுதியால் **இராமசாமி நாகலிங்கம்** ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

குறித்த ஆதனத்தினை **அருணாசலம் இராசா மகள் மாரிமுத்து** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு மு.க. சுப்பிரமணியம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 11755/03.07.1978ம் இலக்க உறுதியால் குறித்த **கந்தையா எதிர்மன்னசிங்கமும் பெண் சரஸ்வதியும்** ஆகியவர்களிடமிருந்து அறுதியாக பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார். **பரமகுரு சற்குரு** ஆகியவர் குறித்த ஆதனத்தினை பிரசித்த நொத்தாரிசு ப.இராசகுரு முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2151/02.03.1998ம் இலக்க உறுதியால் குறித்த **அருணாசலம் இராசா மகள் மாரிமுத்து** ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தினையும் **பரமகுரு இராசகுரு, பரமகுரு சற்குருவும்** சொந்தக்காரர்களாக இருந்து சொரியலாக ஆட்சி செய்வது வசதியீனமாகயிருந்தமையால் **பரமகுரு இராசகுரு முதலாம் பகுதியாகவும், பரமகுரு சற்குரு இரண்டாம் பகுதியாகவும்** பிரசித்த நொத்தாரிசு மு.கதிர்காமநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 3101/27.11.1999ம் இலக்க உறுதியால் **பிரிவிடல்** செய்து தத்தமது பகுதிக்கு சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

குறித்த **பரமகுரு இராசகுரு** காலஞ்செல்ல குறித்த ஆதனம் அவரின் வாரிசுகளான **அரிச்சந்திரன் முருகதாசன் பெண் கலையரசி** ஆகியவருக்கு முதுசமாக வந்தடைந்தது. பெயர்மாற்றத்திற்கு உட்படும் ஆதனத்திற்கு **சதானந்தன் கைம்பெண் அமிர்தாம்பிகை** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு சோ.தேவராஜா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 9470/28.07.2021ம் இலக்க உறுதியால் குறித்த **அரிச்சந்திரன் முருகதாசனும் பெண் கலையரசியும்** ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த **சதானந்தன் கைம்பெண் அமிர்தாம்பிகை** ஆகியவர் ஆதனப்பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **சதானந்தன் கைம்பெண் அமிர்தாம்பிகை** ஆகியவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தவிசாளர்/செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு, பிரதேச சபை.**

(1831)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 69

### வீண் ஆடம்பரமும் வறுமையே...



உலகப் புகழ் பெற்ற காற்பந்து வீரரான 27 வயதான "சாடியோ மானே செனகல்" (மேற்கு ஆபிரிக்கா).

இந்திய ரூபாவில் வாரத்திற்கு 140 மில்லியன் (14கோடி) சம்பாதிப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது...

அவ்வளவு சம்பாதிக்கும் அவர் டிஸ்பிளே உடைந்த மொபைலுடன் பல இடங்களில் காணப்பட்டார்....

ஒரு நேர்காணலில், அதைப் பற்றி அவரிடம் கேட்கப்பட்ட போது அவர் அதற்கு பதிலளிக்கையில் , நான் அதை சரி செய்து, டிஸ்பிளே மாற்றி விடுவேன் என்றார்...

நீங்கள் ஏன் டிஸ்பிளே மாற்ற வேண்டும். பல கோடிகள் சம்பாதிக்கும் நீங்கள் புதிய மொபைலே வாங்கலாமே என்று அவரிடம் கேட்கப்பட்ட போது

"என்னால் ஆயிரம் மொபைல்கள் , 10 ஃபெராரிஸ், 2 ஜெட் விமானங்கள்,

டயமண்ட் கடிகாரங்களை வாங்க முடியும் ,ஆனால் இதையெல்லாம் நான் ஏன் வாங்கனும்?....

நான் வறுமையைப் பார்த்திருக்கிறேன், சாப்பாட்டிற்கு கஷ்டபட்டுள்ளேன்...

என்னால் படிக்க முடியவில்லை, எனக்கு காலணிகள் இல்லை,

காலணிகள் இல்லாமல் விளையாடுவேன், நல்ல உடைகள் இல்லை,

சாப்பிடவில்லை. ஆனால் இன்று நான் நிறைய பணத்தை சம்பாதிக்குறேன் .. அதனால்தான் சம்பாதித்த பணத்தில் தனது மக்கள் படிக்கும்படி பாடசாலைகளை உருவாக்கியுள்ளேன்..

என் நாட்டில் உள்ள ஏழை குழந்தைகளுக்கு புதிய காலணிகளும் உடைகளும் உணவும் கொடுக்கிறேன்...

வசதியாக வாழ்வதற்கு பதிலாக அதை என் மக்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்" எனக் கூறினார்.



Kumuthini Sakthilingam

**அன்பு வாசகர்களே!**
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

## மரண தண்டனை சட்டம் மலேசியாவில் ரத்து

(கோலாலம்பூர்)

கட்டாய மரண தண்டனையை இரத்து செய்ய ஒப்புக்கொண்டதாக மலேசிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

தென்கிழக்கு ஆசிய நர்டான மலேசியாவில், கொலை மற்றும் போதைப்பொருள் கடத்தல் உள்ளிட்ட பல குற்றங்களுக்கு மரண தண்டனை கட்டாயமாக உள்ளது.

2018 ஆம் ஆண்டு ஆட்சியைப் பிடித்த ஒரு சீர்திருத்தக் கூட்டணி மரண தண்டனையை முற்றிலுமாக ரத்து செய்வதாக அறிவித்தது. ஆனால் அரசியல் போட்டியாளர்கள் மற்றும் கொலை செய்யப்பட்டவர்களின் குடும்பங்களின் எதிர்ப்பால் திட்டம் ஸ்தம்பித்தது.

ஆனால், தற்போது கட்டாய மரண தண்டனையை இரத்து செய்ய அமைச்சரவை ஒப்புக்கொண்டதாக சட்ட அமைச்சர் வான் ஜுனைடி துவாங்கு ஜாபர் தெரிவித்தார். (4)

## உக்ரை... பயன்...

(கீவ்)

**உக்ரைனில் அதிச... ஆயுதங்களை பயன்... பிரிட்டன் பாதுகாப்பு அ...**

உக்ரைன் போரில் ரஷ்யா எதிர்பார்த்தது போன்று வெற்றிகளை அடைய முடியவில்லை. கிழக்கு உக்ரைனை கைப்பற்ற ரஷ்யா தற்போது மிகத் தீவிரமாக முயன்று வருகிறது. இங்கு சில புதிய பகுதிகளைக் கைப்பற்றினாலும் கடும் எதிர்ப்புக்களை சந்தித்து வருகிறது.

கடும் மோதல்கள் மாதக் கணக்கில் தொடர்வதால் ரஷ்யா, உக்ரைன் இரு தரப்பி...

லுபே... குண... போ... அள... கை... கிறது... த... கை... தாக... நாடு... கை... கவு... ளது.

## சீனா- ரஷ்யா இடையே முதல் பாலம் திறப்பு



(மொஸ்கோ)

ரஷ்யா மற்றும் சீனா ஆகிய இரு நாடுகளுக்கு இடையிலான முதல் பாலம் திறக்கப்பட்டுள்ளது.

அமுர் ஆற்றின் குறுக்கே, 19 பில்லியன் ரூபிள் செலவில் கட்டப்பட்ட இந்த பாலம் சுமார் 1 கிலோ மீற்றர் நீளத்தில் கிழக்கு ரஷ்ய நகரமான பிளாகோவெஷ் சென்ஸ்க்கை வடக்கு சீனாவின் ஹெய்ஹேவுடன் இணைக்கிறது.

இருநாடுகளின் வண்ண கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்த பாலத்தில் வானவேடிக்கை காட்சிக்கு நடுவில், இருமுனைகளிலில் இருந்தும் சரக்கு வாகனங்கள் பாலத்தை கடந்து சென்றன. (4)

## புதிய ர... உருவா...

(பீஜிங்)


புதிய அணுவாயுத... குவதில் சீனா குறிப்பிட... றத்தை கண்டுள்ளது... துள்ள சீனாவின் பாது... எனினும் தற்பாதுகாப்... மாத்திரமே அவற்... வோம் என தெரிவித்...

சீனா அணுவாயுத... பயன்படுத்தாது எனவு... துள்ளார். அமெரிக்க ... சர் லொயிட் ஒஸ்டின்... இடம்பெறும் சங்கிரி... தைகளின் போது சந்தி... பெங்கே இதனை தெ...

கிழக்கு சீனாவி...



## பிளாஸ்டிக்கை உணவாக உண்ணும் புழுக்கள்



(கன்பரா)

சுற்றுச்சூழலுக்கு பெரும் அச்சுறுத்தலாக விளங்கும் பிளாஸ்டிக்கை உணவாக உண்ணும் புழுக்களை அவுஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

மூன்று வகை புழுக்களிடம் மூன்று வார சோதனை மேற்கொண்டதில் 'சூப்பர் வார்ம்' என்றழைக்கப்படும் புழுக்கள் பிளாஸ்டிக் கழிவுகளை கடித்து தின்று ஜீரணிக்கும் அதிசயத்தை கண்டுபிடித்தனர்.

இந்த புழுக்களின் குடலில் உள்ள ஒருவிதமான நொதி பிளாஸ்டிக்கையே ஜீரணமாக்கி விடுகிறது. இந்த நொதியில் உள்ள பக்டீரியாக்களை ஆய்வு செய்தால் பிளாஸ்டிக் மறுசுழற்சியில் புரட்சியை ஏற்படுத்தலாம் என்று கூறப்படுகிறது. மேலும் சுற்றுச்சூழலை பாதிக்காத பிளாஸ்டிக்கை கூட உருவாக்கலாம் என்றும் நம்பப்படுகிறது.(4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ரனில் அதி பயங்கர ஆயுதங்களை ...ன்படுத்த தயாராகும் ரஷ்யா!

**...அதிக உயிரிழப்புக்களை ஏற்படுத்தக்கூடிய ஆபத்தான ...ா பயன்படுத்த ரஷ்யா தயாராகி வருவதாக உக்ரைன் மற்றும் ...காப்பு அமைச்சக அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.**



...லுமே எறிகுண்டுகள், பீரங்கி குண்டுகள், ஏவுகணைகள் போன்ற ஆயுதங்கள் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டு கையிருப்பு குறைந்து வருகிறது.

தங்களிடமிருக்கும் ஆயுத கையிருப்பு தீர்ந்து வருவதாகவும் இனி மேற்கத்தேய நாடுகள் அனுப்பும் ஆயுதங்களை நம்பியே இருப்பதாகவும் உக்ரைன் கூறியுள்ளது.

ரஷ்யாவிடம் உள்ள நவீன ஆயுதங்களின் கையிருப்பு தீர்ந்து வருவதால் 1960 களில் உருவாக்கப்பட்ட அதி பயங்கர ஏவுகணைகளை உக்ரைனில் பயன்படுத்த ஆயத்தமாகி வருகிறது என உக்ரைன் மற்றும் பிரிட்டன் பாதுகாப்பு அமைச்சக அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

தற்போது ரஷ்யா பயன்படுத்த திட்டமிட்டு வரும் கே.ஹெச்-22 எனப்படும் ஏவுகணைகள், அணு ஆயுதத்தை சுமந்து மிகப்பெரிய விமானம் தாங்கி கப்பல்களை தாக்கி அழிப்பதற்காக உருவாக்கப்பட்டது.

அந்த ஏவுகணைகளில் வழக்கமான வெடி குண்டுகளை பொருத்தி தரை இலக்குகளைத் தாக்கும்போது அவை மிகப் பெரிய சேதத்தை ஏற்படுத்தும்.

இதனால், இராணுவ இலக்குகளுக்கு பதிலாக குடியிருப்புப் பகுதிகளில் அந்த ஏவுகணைகள் விழுந்து ஏராளமான அப்பாவி பொது மக்கள் பலியாகும் அபாயம் உள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, கிழக்கு உக்ரைனின் லுஹான்ஸ்க் பகுதியில் ரஷ்யப் படையினர் நெருப்புப் பிழம்புகளைக் கக்கும் ஆயுங்களைப் பயன்படுத்துவதாக அந்தப் பிராந்திய ஆளுநர் செஹி ஹாய்டாய் குற்றம் சாட்டியுள்ளார். (4)

## ...ய ரக அணு ஆயுதங்களை ...ருவாக்குவதில் சீனா வெற்றி

...அணுவாயுதங்களை உருவாக் ...ா குறிப்பிடத்தக்க முன்னேற் ...ண்டுள்ளது என தெரிவித் ...ாவின் பாதுகாப்பு அமைச்சர் ...தற்பாதுகாப்பு நோக்கத்துடன் ...ே அவற்றை பயன்படுத்து ...ன தெரிவித்தார்.

...அணுவாயுதங்களை முதலில் ...தாது எனவும் அவர் தெரிவித் ...அமெரிக்க பாதுகாப்பு அமைச் ...ட் ஒஸ்டினை சிங்கப்பூரில் ...ும் சங்கிரிலா பேச்சுவார்த் ... போது சந்தித்தவேளை வெய் ...ிதனை தெரிவித்துள்ளார்.

...த சீனாவில் அணுவாயுதங்களை ஏவுவதற்கான 100 தளங்கள் உருவாக்கப்பட்டுள்ளன என்ற கேள்விக்கு பதிலளித்துள்ள சீனாவின் வெளிவிவகார அமைச்சர் நாட்டின் பாதுகாப்பிற்காக அணுவாயுத தொழில்நுட்பங்களை உருவாக்குவதற்காக சீனா பொருத்தமான பாதைகளை பயன்படுத்தியுள்ளது என தெரிவித்துள்ளார்.

2019 இல் சீனாவில் இடம்பெற்ற இராணுவ அணிவகுப்பில் காட்சிப்படுத்தப்பட்ட அணுவாயுதங்கள் பயன்படுத்தக்கூடிய நிலையில் உள்ளன. அவற்றை பயன்பாட்டிற்கு ஏற்ற விதத்தில் நிலை கொள்ளச் செய்துள்ளோம் என சீன பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார். (4)



## ரஷ்யாவின் தாக்குதலில் 287 சிறுவர்கள் பலி

(கீவ்)

உக்ரைன் மீதான ரஷ்யாவின் போரில் 287 உக்ரைனிய சிறுவர்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும் 492 க்கும்மேற்பட்ட சிறுவர்கள்காயமடைந்துள்ளதாகவும் உக்ரைன் சட்டமா அதிபர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

ரஷ்யாவால் கைப்பற்றப்பட்டுள்ள தென்கிழக்கு துறைமுகமான மரியுபோலில் மேலும் 24 சிறுவர்கள் கொல்லப்பட்டுள்ளமை குறித்த தகவல்கள் தற்போது வெளியாகியுள்ளதாகவும் சட்டமா அதிபர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

இந்த புள்ளிவிபரங்கள் இறுதியானவை அல்ல. இதனைவிட அதிகளவான சிறுவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம். பல பிரதேசங்களில் இன்னமும் உக்கிர மோதல்கள் நடந்து வருவதால் முழுமையாக தரவுகளைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்கள் உள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மரியுபோல் நகரம் முற்று முழுதாக சிதைக்கப்பட்டு விட்டது. அங்கு கழிவகற்றல் கட்டமைப்பு அழிந்துபோய் உள்ளது. தெருக்களில் சடலங்கள் அழுகிய நிலையில் காணப்பட்டன. இதனால் இந் நகரில் கொலரா நோய் தீவிரமடைந்துள்ளது என நகர மேயர் தெரிவித்துள்ளார். (4)

## துப்பாக்கி வன்முறைக்கு எதிராக அமெரிக்காவில் திரண்ட மக்கள்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் துப்பாக்கி தொடர்பான சட்டங்களை கடுமையாக்குமாறு வலியுறுத்தி பாரிய ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. வீதிகளில் ஆயிரக்கணக்கான மக்கள் கூடி ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்ததாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.




குறித்த போராட்டங்களுக்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் ஆதரவை வழங்கியுள்ளதுடன் அதேவேளை துப்பாக்கி பாதுகாப்பு சட்டத்தை நிறைவேற்றுவதற்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

டெக்சாஸ், உவால்டேவில் உள்ள ஆரம்ப பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் சமீபத்தில் படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து இந்த போராட்டங்கள் வலுப்பெற்றுள்ளன. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மன்னார் வலயக் கல்விப்பணிமனைக்குட்பட்ட பாடசாலைகளுக்கான 2022 ஆண்டுக்கான வலய மட்ட மெய்வல்லுனர் விளையாட்டுப்போட்டி முருங்கன் மைதானத்தில் அண்மையில் இடம் பெற்ற நிலையில் 153 புள்ளிகளை பெற்று மன்/புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை முதலிடத்தையும் இரண்டாம் இடத்தை 85 புள்ளிகளுடன் வங்காலை சென் ஆன்ஸ் மத்திய மகா வித்தியாலயமும் மூன்றாம் இடத்தை 78 புள்ளிகளுடன் முருங்கன் மத்திய கல்லூரியும் பெற்றுக் கொண்டது. (படம்- ஜோசப்நயன்)

## சிந்துநடைக்கூத்து அரங்கேற்றம்

(சாவகச்சேரி)

எழுதுமட்டுவாழ் செட்டிக் கேணி நாச்சியம்மாள் ஆலயத்தில் நாளை செவ்வாய்க்கிழமை வைகாசிப் பௌர்ணமி தினத்தன்று காத்தவராயன் சிந்துநடைக் கூத்து அரங்கேற்றப்படவுள்ளது.

வைகாசிப் பௌர்ணமி தினத்தன்று இரவு 7.30 மணிக்கு "மாலைக்கு வாதாடிய மைந்தன்" என்ற கருப்பொருளில் அரங்கேறவுள்ள சிந்துநடைக் கூத்தினை அனைவரும் தவறாது கண்டு களிக்குமாறு விழா ஏற்பாட்டுக் குழுவினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (4-6-30)

## இளைஞர் யுவதிகளுக்கான போதைப்பொருள் தடுப்பு செயலமர்வு



(மன்னார்)

இளைஞர் யுவதிகளுக்கு இடையே சமூக ஒத்திசைவை பலப்படுத்தல் எனும் தொனிப் பொருளில் ரஹமா நிறுவனத்தின் அனுசரணையில் வாழ்வுக்கான தன்னார்வ தொண்டர் அமைப்பின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்டத்தில் உள்ள இளைஞர் யுவதிகளை ஒன்றிணைத்து ஏற்பாடு செய்யப்பட்ட போதைப்பொருள் தடுப்பு தொடர்பான விசேட செயலமர்வு மற்றும் தலைமைத்துவப் பயிற்சி மன்னார் நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

மாவட்ட ரீதியாக தெரிவு செய்யப்பட்ட இளைஞர் யுவதிகளுக்கு போதைப்பொருள் தொடர்பான தெளிவூட்டலை உருவாக்கும் முகமாகவும் சமூக ரீதியாக போதைப் பொருள் பயன்பாட்டை இல்லாதொழிக்க மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகளை உருவாக்கும் முகமாகவும் குறித்த செயற்திட்டம் ஒழுங்கமைக்கப்பட்டு இடம் பெற்றது

இந்த நிகழ்வில் போதைப் பொருள் பாவனைக்கு எதிராகவும் போதைப்பொருள் பாவனையை குறைப்பதற்குமான சத்தியப் பிரமாணமும் இளையோரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது குறிப்பிடதக்கது. (4-6-285)

## கட்டுப்பாட்டு விலையை மீறி அரிசி விற்பனை

(தருமபுரம்)

கட்டுப்பாட்டு விலையை மீறி அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்வதால் அன்றாடம் வேலை செய்யும் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக பல அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் கூடியுள்ளது.

இந் நிலையில் அரிசியின் கட்டுப்பாட்டு விலையை் விட அதிக விலைக்கு விற்பனை நிலையங்களில் விற்பனை செய்வதால் அன்றாடம் கூலித் தொழில் செய்யும் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் அரிசி பதுக்கல், விலையேற்றம் செய்வோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர். (4-6-316)

## அனுமதியின்றி ஏற்றிச் செல்லப்பட்ட விறகுகள் பறிமுதல்




(தருமபுரம்)

பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆணையிறவு பகுதியில் அனுமதியின்றி ஏற்றிச்செல்லப்பட்ட கொத்து விறகுகள் நேற்று கிளிநொச்சி மாவட்ட மது ஒழிப்பு பிரிவினரால் பறிமுதல் செய்யப்பட்டது.

குறித்த சம்பவமானது நேற்று அதிகாலை 6 கனரக வாகனங்களில் வீர விறகு, பாலை, பூவரசு போன்ற கொத்து விறகுகள் அனுமதியின்றி ஏற்றிச் சென்றவர்கள் கிளிநொச்சி மது ஒழிப்பு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து ஆணையிறவில் வைத்து கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட வாகனங்கள் மற்றும் சாரதிகள் பளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர். மேலும் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தபடவுள்ளதாகவும் பளைபொலிஸார் தெரிவித்தனர். (4-6-316)



கிளிநொச்சி பரந்தன் பகுதியில் புதிதாக புனரமைப்புச் செய்யப்பட்ட புனித அந்தோனியார் ஆலயம் யாழ். மறைமாவட்ட ஆயரால் நேற்று முன்தினம் மாலை அபிஷேகம் செய்து வைக்கப்பட்டு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. (படம்-யதுபாஸ்கரன்)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1989 கிறிஸ்தவம்<br>கி.பா: சூரி.செவ் 12 இல்<br>நட்சத்திரம்:பூரட்டாதி 4<br>உயரம்:174cm<br>தகைமை/தொழில்:HNDA Medical Export (தனியார்துறை)<br>எதிர்பார்ப்பு:நன்கு படித்த பெண்<br>தொ.இ: B/12708 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்:ஆயிலியம் 4<br>கி.பா:13 சூரி.செவ் 10 இல்<br>உயரம்:5'3"<br>தகைமை/தொழில்:BSc<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி (வைத்தியர் வேண்டாம்)<br>தொ.இ:G/12710 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்:பூசம் 4<br>கி.பா:சூரி 11 செவ் 8 இல்<br>உயரம்:6'3"<br>தகைமை/தொழில்: HNDA, PGDE, MED, PGDEM,SLPS III பாடசாலை பிரதி அதிபர்<br>எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/12712 | பிறப்பு:1993 இந்து<br>நட்சத்திரம்:அனுசம் 3<br>கி.பா:45 சூரி 10 செவ் 11 இல்<br>உயரம்:5'4"<br>தகைமை/ தொழில்:BA பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு:அரச.தனியார் தொழில்<br>தொ.இ: G/12711 |
| பிறப்பு: 1985இந்து<br>நட்சத்திரம் : மகம்<br>கி.பா: சூரி .செவ் 4 இல்<br>உயரம்:5'8"<br>தகைமை/தொழில்:A/L நீதிமன்ற பாதுகாவலர்<br>எதிர்பார்ப்பு : சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/12713 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி 3<br>கி.பா:52 ¾சூரி 12 செவ் 1 இல்<br>உயரம் : 176 cm<br>தகைமை/தொழில்:சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு:அரசதொழில் மட்டும் சமுர்த்தி உத்தியோகத்தர் வேண்டாம்<br>தொ.இ:G/12715 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம் : சதயம் 3<br>கி.பா:15 ¼ சூரி 11 செவ் 10 இல்<br>உயரம்:5'7"<br>தகைமை/தொழில்: BSc Engineering ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு:உயர்பதவி அல்லது பட்டதாரி உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/12714 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 2<br>கி.பா: சூரி 5 செவ் 8 இல்<br>உயரம் :-5'2"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ:G/12717 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1566 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரலாற்று சிறப்பு மிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன்
# ஆலய பொங்கல் விழா இன்று



பத்தாம்பளை என்னும் வற்றாப்பளைக் கிராமத்தில் அருளாட்சி செய்து கொண்டிருக்கும் கண்ணகி அம்மன் வருடாந்த பொங்கல் விழா இன்று திங்கட்கிழமை இடம் பெறும். வைகாசி விசாகம் கூடிய பூரணை தினத்தில் இடம்பெறுவது வழமையாகும்.

பொங்கலுக்கு முதல் திங்கள் தீர்த்தம் எடுத்தல் நிகழ்வும் அதற்கு முதல் திங்கள் 'பாக்கு தெண்டுதல்' நிகழ்வும் இப் பொங்கலுக்கு சிறப்புச் செய்யும் நிகழ்வுகள் ஆகும்.

தீர்த்தக்குடம் சுமப்பவர் முள்ளியவளைக் காட்டா விநாயகர் ஆலயத்தில் இருந்து தனது பணியை ஆரம்பிப்பார். பின்னர், பெருங்கடலில் தீர்த்தம் எடுத்து குடம் நிரம்பியதும் தீர்த்தக்குடம் சுமந்து வந்து மீண்டும் முள்ளியவளை காட்டா விநாயகர் ஆலயத்திலேயே தீர்த்தக்குடம் இறக்கி வைக்கப்படும்.

அவ்வாலயத்தில் தென்மேற்கு மூலை உட்பிரகாரத்தில் அமைந்துள்ள அம்மன் தெய்வ பரிவார மூர்த்தி திருத்தலத்தின் வாசலில்தான் கடல் தீர்த்த விளக்கு எரிக்கப்படுவது வழமையாகும். இதுவே, கடல் நீரில் விளக்கு எரியும் அற்புதம் மிக்க காட்சியாகும்.

பின், மறுநாள் அதிகாலை அவ்விளக்கும் தீர்த்தமும் வற்றாப்பளை அம்மன் ஆலயம் நோக்கி மடைப் பண்டங்கள் சகிதம் எடுத்துச் செல்லப்படுகிறது. பின், வற்றாப்பளை அம்மன் ஆலயத்தில் கடல்நீர் தீர்த்த விளக்கு எரிக்கப்படும்.

வற்றாப்பளை அம்மனின் பொங்கல் அன்று இரவு மூன்று வளந்துப் பானைகளில் அம்மனுக்கு முறைப்படி பொங்கல் இடப்பட்டு அமுது படைக்கப்படும். இதே மாதிரியான வளந்துப் பொங்கல் முள்ளியவளைக் காட்டா விநாயகர் ஆலயத்திலும் முதல்நாள் நடைபெறுவது வழக்கம்.

மிகப் பழைய காலத்தில் இப்பிரதேச எல்லைக்குள் ஒரேயொரு அம்மன் ஆலயம் சிறிய அமைப்பில் காணப்பட்டுள்ளமை இதனால் உணரப்பட்டுள்ளது. இவ்வாலயமே காட்டா விநாயகர் ஆலய உட்பிரகாரத்தில் காணப்படும் அம்மன் அமர்ந்துள்ள சிறு கோயிலாகலாம். தற்போது வற்றாப்பளையில் அமைந்துள்ள கண்ணகி ஆலயம் பிற்காலத்தில் அமைக்கப்பட்ட ஆலயமாகலாம். முதலாம் கஜபாகு மன்னன் இந்திய சேர நாட்டிலிருந்து யாழ் - சம்பில்துறை வழியாக எடுத்து வந்த அம்மன் சிலைகளில் (பத்தினி) ஒன்றுதான் வற்றாப்பளை அம்மன் ஆலயத்தில் விளங்குவதாகவும் வரலாற்று ஐதீகங்கள் கூறியுள்ளன.

'சிலம்பு கூறல்' - என்னும் கண்ணகியின் காப்பிய நூல் வற்றாப்பளை அம்மன் ஆலயத்தின் தோற்ற வரலாறுகள், சிறப்புக்கள், அம்மனின் அருள் ஆட்சி நிலைகள் பற்றிக் கூறுவதாக அமைந்துள்ளது.

மக்கள் கண்ணகி அம்மனை காவல் தெய்வமாகவும் கண்கண்ட தெய்வமாகவும் கண்ணெதிரே காட்டுபவளாகவும் சௌபாக்கியம் அருளும் தெய்வமாகவும் மகப்பேற்று பாக்கியம் அருளும் தெய்வமாகவும் போற்றி வழிபடுகின்றனர்.

**கு. சிவபாலராஜா**
**நல்லூர்.**

## இலங்கைக்கான
# பயணக் கட்டுப்பாடுகளை தளர்த்தியது பிரித்தானியா

(கொழும்பு)

இலங்கைக்கு செல்லும் பயணிகளுக்கு விதித்திருந்த பயணக் கட்டுப்பாடுகளை பிரித்தானியா தளர்த்தியுள்ளது. புதுப்பிக்கப்பட்ட பயண ஆலோசனைகளை வெளியிட்டு பிரித்தானிய வெளிநாட்டு அலுவலகம் இதனைத் தெரிவித்துள்ளது.

இலங்கையில் ஆர்ப்பாட்டங்கள். முன்னெடுக்கப்படும் போது சில இடங்களில் அதனை கலைப்பதற்காக பாதுகாப்பு தரப்பினரால் கண்ணீர்ப் புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகம் என்பன நடத்தப்பட்டுள்ளன.

எனவே, அவ்வாறான ஆர்ப்பாட்டங்கள் மற்றும் ஒன்றுகூடல்களை தவிர்ப்பதோடு விழிப்புடன் செயற்பட வேண்டும் என பிரித்தானியா தமது நாட்டு பிரஜைகளிடம் கோரியுள்ளது.

அத்துடன் இலங்கை அதிகாரிகள் வழங்கும் அறிவுறுத்தல்களை பின்பற்றுமாறும் பிரித்தானிய வெளிவிவகார அலுவலகம் தமது பிரஜைகளை வலியுறுத்தியுள்ளது. (4)

# 3,400 கோடி சொத்துக்கு சொந்தக்காரர் யோசித
## சிங்கள் ஊடகம் தகவல்

(கொழும்பு)

முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது மகன் யோசித ராஜபக்ஷ தனது 34 வயதில், 3400 கோடி ரூபாய் பெறுமதியான சொத்துக்களுக்கு சொந்தக்காரர் என சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. யோசித ராஜபக்ஷ நேற்று தனது 34 வயது பிறந்தநாளை கொண்டாடினார் என்றும் அந்த ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த மே 9 ஆம் திகதி அமைதியான ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் பிரதான திட்டங்களை மேற்கொண்டவர் யோசித ராஜபக்ஷ என குற்றம் சாட்டப்பட்டுள்ளது. எனினும் இதுவரையில் யோசிதவிடம் வாக்குமூலம் பெறுவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.

அனைத்தையும் திட்டமிட்ட யோசித 9 ஆம் திகதி அதிகாலை சிங்கப்பூர் ஊடாக மெல்பேர்ன் நகரத்திற்கு சென்ற நிலையில் அங்கிருந்து பெர்த் நகரத்திற்கு சென்றமை குறிப்பிடத்தக்கது. (4)

# பசிலின் முடிவு வரவேற்கத்தக்கது
## வாசு தெரிவிப்பு

(கொழும்பு)

கௌரவமான முறையில் பசில் ராஜபக்ஷ பாராளுமன்ற உறுப்புரிமையை இராஜினாமா செய்தமை வரவேற்கத்தக்கது என வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தத்தில் இரட்டைக் குடியுரிமை விவகாரத்தை தோற்கடிக்க பசில் ராஜபக்ஷ மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியில் முடிந்ததாகவும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை தவிர்த்து ஏனைய ராஜபக்ஷர்கள் அரசாங்கத்திலிருந்து விலகியுள்ளதாகவும் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

இந்நிலையில் தற்போது அரசாங்கத்திற்கு எதிரான மக்களின் போராட்டம் பெருமளவில் வெற்றி பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

21ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டவுடன், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை முழுமையாக இரத்து செய்ய அவதானம் செலுத்த வேண்டும் என கேட்டுக்கொண்டார். (4)

## எம்.பி கொலை
# 31 பேர் — விளக்கமறியலில்

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரலவின் படுகொலை தொடர்பில் இதுவரை 31 சந்தேக நபர்களை சி.ஐ.டியினர் கைது செய்துள்ளனர்.

சி.ஐ.டி யின் மனிதபடுகொலை மற்றும் திட்டமிடப்பட்ட குற்றங்கள் தொடர்பிலான விசாரணை பிரிவினர் இந்த 31 பேரையும் கைது செய்துள்ளனர். இந்நிலையில் கைது செய்யப்பட்ட 31 பேரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (4)

# ஆஸி. செல்ல முற்பட்ட 36 பேர் நேற்று கைது

(கொழும்பு)

நீர்கொழும்பில் இருந்து அவுஸ்திரேலியாவுக்கு படகு ஒன்றில் சட்டவிரோதமாக சென்ற 36 பேரை தென்கிழக்கு கடலில் வைத்து கடற்படையினர் நேற்று கைது செய்துள்ளனர்.

நேற்று அதிகாலை குறித்த கடல் பகுதியில் கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது அவுஸ்திரேலியா நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த படகை கடற்படையினர் இடை மறித்து சோதனையிட்டபோது அதில் 6 சிறுவர்கள் 6 பெண்கள் உட்பட 36 பேர் சட்டவிரோதமாக சென்றமை தெரியவந்துள்ளது. இதனையடுத்து படகை வாழைச்சேனை கடற்படை முகாமிற்கு கொண்டு சென்றுள்ளதாகவும் அதில் நீர்கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு பிரதேசங்களை சேர்ந்தவர்கள் உள்ளடங்குகின்றனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 350 | 300 | 250 | 400 |
| உருளைக்கிழங்கு | 230 | 220 | 240 | 250 |
| பச்சைமிளகாய் | 450 | 400 | 600 | 550 |
| தக்காளி | 800 | 650 | 700 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 220 | 160 | 140 |
| கோவா | 380 | 350 | 350 | 400 |
| கரட் | 200 | 340 | 380 | 400 |
| பூசணி | 160 | 150 | 160 | 160 |
| புடோல் | 260 | 200 | 240 | 320 |
| வாழைக்காய் | 80 | 70 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 450 | 400 | 400 | 480 |
| பெரிய வெங்காயம் | 200 | 200 | 200 | 240 |
| பாகற்காய் | 700 | 600 | 600 | 600 |
| வெண்டைக்காய் | 240 | 200 | 200 | 400 |
| கருணைக் கிழங்கு | 200 | 240 | 240 | 200 |
| பயற்றங்காய் | 400 | 350 | 500 | 400 |
| லீக்ஸ் | 200 | 260 | 280 | 320 |
| பீற்றூட் | 350 | 300 | 350 | 380 |
| கறிமிளகாய் | 400 | 500 | 400 | 500 |
| முருங்கைக்காய் | 1000 | 1100 | 1000 | 1400 |
| போஞ்சி | 800 | 600 | 800 | 800 |
| கத்தரிதம்புள்ள | 300 | 250 | 300 | 350 |
| கீரை - 1 பிடி | 80 | 50 | 100 | 100 |
| தேசிக்காய் | 800 | 500 | 450 | 450 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 75 | 80 | 60-80 |
| இராசவள்ளி | 160 | 300 | 200 | 220 |
| வெங்காயப்பூ | 650 | 550 | — | 600 |
| முள்ளங்கி | 300 | 200 | 240 | 280 |
| பொன்னாங்கண்ணி | 80 | 70 | 80 | 80 |
| வல்லாரை | 20 | 20 | 50 | 40 |
| ஈரப்பலா | 80 | 150 | — | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

### அம்புலிமாமா

## சண்டைக்குப் பரிசு!



(நேற்றைய தொடர்ச்சி)

அப்போது இதில் எவ்வளவு இருந்தது என்று சொல்கிறேன்" என்று கூறிப் பணத்தை இடுப்பில் சொருகிக் கொண்டான். அன்னமும் "ஆஈ அப்படியே செய்யுங்கள். நாலைந்து நாட்கள் கழித்து வர முடியாவிட்டாலும் பத்து நாட்கள் கழித்து வந்து கூடச் சொல்லலாம் அவசரமில்லை.

உங்கள் கை விரலுக்கு மோதிரம் அழகாக இருக்குமே. என் கணவர் போட்டிருக்கும் மோதிரத்தை எடுத்துக் கொள்ளுங்கள். இது என் அப்பா அவருக்குக் கொடுத்தது. எப்போதும் என் வீட்டாரை கரித்துக் கொட்டும் இவருக்கு அவர் கொடுத்த மோதிரம் எதற்கு?" என்றாள்.

இதைக் கேட்ட கறுப்புத் திருடன் ஆதி மூலத்தின் விரலிலிருந்த மோதிரத்தைக் கழற்றி எடுத்துக் கொண்டான். அப்போது ஆதி மூலம் "ஐயா வெள்ளைத் திருடரே! இவள் தன் நகைகளையெல்லாம் ஒரு பெட்டியில் போட்டு இவ் வீட்டுக் கிணற்றிற்குள் போட்டு வைத்திருக்கிறாள். கிணற்றில் இறங்கி எடுத்துக் கொள்ளுங்கள்" என்றான். அப்போது அன்னம் "என் நகைகள் இருக்கும் இடத்தைச் சொல்லிப் பழியா வாங்குகிறீர்கள்?" என்று பொருமினாள். வெள்ளைத் திருடனோ "சரி, சரி, நட கிணற்றிற்கு" என்றான். அப்போது அன்னம் "நாம் போனதும் இவர் பலமாகக் கத்தி ஊரைக் கூட்டி விடுவார். அதனால் இவரது வாயில் துணிப்பந்தை அடைத்து விட்டு வாருங்கள்" என்றாள். கறுப்புத் திருடன் உடனே ஆதி மூலத்தின் வாயில் துணியைத் திணித்தான். இரு திருடர்களும் அன்னம் வழிகாட்ட கிணற்றை அடைந்தார்கள்.

வெள்ளைத் திருடன் கிணற்றில் தொங்கிய தாம்புக் கயிறை எடுத்து ஒரு மரமுனையில் கட்டி மறுமுனையைக் கிணற்றுள் விட்டு அக் கயிறை பிடித்துக் கொண்டு கிணற்றுள் இறங்கினான். அப்போது அன்னம் கண்ணீர் வடித்தவாறே "என் நகைகள் போகட்டும் என்றா என் கணவர் நினைத்தார்? நானும் அவரது அம்மா காசிக்குப் போகுமுன் தம் நகைகளை வீட்டுப் பரண் மீது ஒரு ஓலைப் பெட்டியில் வைத்திருப்பதைச் சொல்கிறேன்.


நீங்கள் என் கணவரின் அறைக்குப் போய் பரண் மீது ஏறி அந்தப் பெட்டியை எடுத்துக் கொள்ளுங்கள்" என்றாள். கறுப்புத் திருடன் வீட்டிற்குள் சென்றான். அந்த அறையைக் காட்டுவதற்காக அன்னமும் அவன் கூடவே சென்றாள்.

திருடர்களுக்கு ஒரே மகிழ்ச்சி, கணவன் - மனைவியரின் சண்டையால் தங்களுக்கு இரு வகை வருமானம் என்று இரு திருடர்களும் எண்ணினார்கள்.

(தொடரும்)

# கம்பராமாயணம்

## யுத்த காண்டம்




அந்த நாட்டில் அச்சடித்த நீதி நூலில் ஊன் உண்ணாமையும், மது மறுத்தலும் தடை செய்யப்பட்டவை; இவனோ விதி விலக்கு: சைவ உணவு தவிர மற்றவற்றைச் சுவையாதவன் கோயில் குருக்களாகப் பிறக்க வேண்டியவன் அரக்க குலத்தில் பிறந்து விட்டான்."

"இவன்தான் இப்படி அவன் மகள் எப்படி? அந்தப் பெண் அங்கு இல்லாவிட்டால்; சிறை வாசத்தைச் சீதைக்கு சுகவாசமாய் மாற்றி இருக்க முடியாது. இராவணன் மருட்டிய போது எல்லாம், "அவன் கட்டுண்ட பட நாகம்; வெற்று வேட்டு; அவனால் சீதையைத் தொட முடியாது; தொட்டால் அவன் தலை சுக்கு நூறாகும்" என்ற சாபத்தை எடுத்துச் சொன்னவள் அவள்தான். சீதைக்காக நம்பிக்கைக் கனவுகளைக் கண்டு சொல்லியதும் அவள்தான்; அந்தக் குடும்பமே நமக்குத் துணையாக இருந்து வருகிறது; பகை நடுவே பண்புமிக்க நண்பர் [illegible] கள் இது அவர் [illegible] மனித இயல், அரசியல் வேறு". "இவன் பகை மண்ணில் பிறந்தவன்; போர் மறைகளை அறிந்தவன் யார்? எது? என்பனவற்றை அறிந்து தெரிந்தவன். இராவணன் பெற்ற வரமோ, அவன் படையின் தரமோ நமக்குத் தெரியாது; 'உடன் பிறந்தே கொல்லும் வியாதி' என்பது பழமொழி; அவனை அழிப்பதற்கு இவன் தேவைப்படுவான்; இவனை நாம் சேர்த்துக் கொள்வது அரசியல்".

அரசியலில் கட்சி மாறுவது இயற்கை அதற்கு உரிமை உண்டு; அதற்குத் தக்க தடுப்புச் சட்டம் எதுவும் உருவாகவில்லை; இவன் சமையலுக்கு வேண்டிய கறிவேப்பிலை தான்; தேவை இல்லை என்றால் நம்மால் இவனைத் தூக்கி எறிய முடியும்; அரக்கர் சேனையை அஞ்சாத நாம், இந்தக் கடுவன் பூனையைக் கண்டு ஏன் அஞ்ச வேண்டும். வெள்ளத்தில் இவன் ஒரு நீர்க்குமிழி; அது தானே கரைந்து விடும்; வெடித்து விடும். நம் ஆற்றலில் நமக்கு நம்பிக்கை உண்டு" என்று அனுமன் கூறினான்.

பகைவன் என்பதால் சுக்கிரீவன் அஞ்சினான்; சாம்பவான் சாதியைப் பற்றிப் பேசினான்; நீலன் ஓட்டைப் படகு என்றான்; அனுமன் ஒரு கறிவேப்பிலை என்றான்; எரிந்த கட்சி எரியாத கட்சியாய் வாதம் இட்டனர்.

பட்டிமன்றப் பேச்சு கேட்டு நடுநிலை வகித்துக் கருத்தைக் கூறும் தலைவர்களைப் போல, மாருதி சொன்ன கருத்தை, இராமன் ஏற்றுக் கொண்டான்; ஆனால், சிறிது வேறுபட்டுப் பேசி இரு கட்சியினரும் பேசியது சரியே" என்று ஒப்புக் கொண்டு மேலும் புதியது பேசினான்.

"நன்மையோ, தீமையோ அதைப் பற்றி நாம் சிந்திக்கத் தேவை இல்லை; அடைக்கலம் என்று வந்தவனுக்கு ஆதரவு தருவது அரிய பண்பாடு; அதை நாம் ஏற்க வேண்டும்".

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் முன்னேற்றப் பாதையில் செல்வதே நம்மவர்களையும் முன்னேறச் செய்ய சிறந்த வழி.

– ஸ்ரீ அன்னை

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தட்டுப்பாடான மருந்துகளை வாங்கிக் கொடுத்து உதவுங்கள்

வைத்தியசாலைகளில் ஏற்பட்டுள்ள மருந்துத் தட்டுப்பாடு காரணமாக நோயாளர்கள் மிகுந்த சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இதுபற்றி ஏலவே இவ்விடத்தில் பிரஸ்தாபித்திருந்தோம்.

நிலைமை இதுவாக இருக்கையில், மாற்று மருந்துகள் போதியளவு கையிருப்பில் உள்ளதாக மத்திய சுகாதாரத் திணைக்களம் அறிவித்திருக்கிறது.

ஆனால் உண்மை அதுவன்று. சுகாதாரப் பிரிவு கூறுவது சுத்தப்பொய். எனினும் அதை எடுத்துரைப்பதற்கு வைத்தியசாலை நிர்வாகங்கள் தயாரில்லை.

உண்மையில் நாட்டிலுள்ள வைத்தியசாலைகள் பலவற்றில் அத்தியாவசிய மருந்துப் பொருட்களுக்குப் பெருந்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் நோயாளர்களுக்கு உகந்த மருந்துகளை – சிகிச்சைகளை வழங்க முடியாத துர்ப்பாக்கிய நிலைமை உருவாகிவிட்டது.

இதுவே நிதர்சனமான உண்மையாயினும் மாற்று மருந்துகள் கையிருப்பில் தாராளமாக இருப்பதாக சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

எது எவ்வாறாயினும் வடபகுதியைப் பொறுத்தவரை விசர்நாய்க்கடிக்கு பயன்படுத்தப்படும் ஏஆர்வி (ARV) மருந்து முற்றாகத் தீர்ந்துவிட்டது.

தற்போதிருக்கின்ற சூழமைவில் தெருநாய்களின் தொல்லை சொல்லிமாளா. தெருநாய்களைப் பிடித்து அழிக்கின்ற நடைமுறைகள் இல்லாதுபோனதன் பிற்பாடு தெருநாய்கள் கண்டபாட்டில் பெருகிவிட்டன.

இதனால் நாளாந்தம் தெருநாய்க்கடிக்கு ஆளாகின்றவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது.

இந்நிலையில் தெருநாய்க்கடிக்கு ஆளானவர்களுக்கு விசர்நாய்க்கடிக்கான ஏஆர்வி மருந்து ஏற்றுவது அவசியமாகிறது.

எனினும் நம் வைத்தியசாலைகளில் ஏஆர்வி மருந்து தீர்ந்துபோனதால் விசர்நாய்க்கடிக்கு ஆளானவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்க முடியாத துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இது ஓர் உதாரணம் மட்டுமே. இதுதவிர மாரடைப்பு நோய்க்கு அளிக்கக்கூடிய சிகிச்சைகள் மற்றும் நோய்களை இனம் காண்பதற்கான ஸ்கானிங் செயன்முறைக்குத் தேவையான மருந்துப் பதார்த்தங்களுக்கும் எமது வைத்தியசாலைகளில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதான தகவல் உண்டு.

எனவே தட்டுப்பாடான மருந்து வகைகளையும் சிகிச்சைகளுக்குத் தேவையான மருந்துப் பொருட்கள் மற்றும் உபகரணங்களையும் வாங்கிக் கொடுப்பதற்கு சமூக அமைப்புகள் முன்வர வேண்டும்.

அதிலும் குறிப்பாக நம் மத்தியில் இருக்கக்கூடிய ஆலயங்கள் இந்தப் பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வது அவசியம்.

அதேநேரம் எமது பிரதேசத்தில் இருக்கக்கூடிய வைத்தியசாலைகள், தட்டுப்பாடாக இருக்கக்கூடிய மருந்துப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கு சமூக நிறுவனங்களையும் ஆலயங்கள் மற்றும் பொது அமைப்புகளையும் கொடையாளர்களையும் நாட வேண்டும்.

தேவைப்படுகின்ற அத்தியாவசிய மருந்துப் பொருட்களின் விபரங்களை ஊடகங்கள் வாயிலாகத் தெரிவிக்கும்போது அந்த மருந்துப் பொருட்களை நம்மவர்கள் நிச்சயம் வாங்கிக் கொடுப்பார்கள்.

ஆக, மருந்துத் தட்டுப்பாடு என்று பேசாது இருந்துவிடாமல், தட்டுப்பாடான மருந்து வகைகளைப் பெற்றுக் கொள்ளும் வழிமுறைகளை அணுகி அதன்மூலம் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதுதான் எம்மக்களுக்கு நாம் செய்கின்ற மகத்தான சேவையாகும்.

# விவசாயத்திற்கு ஏற்ற காணிகளை கையகப்படுத்த நடவடிக்கை

## விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையின் தொடராக நாடளாவிய ரீதியில் கைவிடப்பட்டுள்ள விவசாயத்திற்கு ஏற்ற காணிகளில் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இதற்காக குறித்த காணிகளை 5 வருடங்களுக்கு பொறுப்பேற்பதற்கான வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

விவசாய அமைச்சில் இடம்பெற்றுள்ள பாராளுமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் இது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

கமநல சேவை திணைக்களத்தினால் விவசாய காணிகள் இனங்காணப்பட்டு, பயிரிட விரும்புபவர்களுக்கு அதனைக் கையளிக்க நடவடிக்கை எடுக்கவுள்ளது.

நாடளாவிய ரீதியில், சுமார் ஒரு இலட்சம் ஹெக்டயர் தரிசு நிலங்கள் காணப்படுகின்றன.

அவற்றில் சுமார் 50 ஆயிரம் ஹெக்டயர் அளவான காணிகள் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள பொருத்தமானதாகக் காணப்படுவதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார். (ம-7)

## வெளிவிவகார அமைச்சின் தூதரகம் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் தமது சேவையை வழங்கும்

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சின் தூதரக அலுவலகம் இன்று மட்டுப்படுத்தப்பட்ட அளவில்தமது சேவையை வழங்கவுள்ளது.

வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் எதிர்வரும் 14ஆம் திகதி பூரணை விடுமுறை தினம் என்பதால் அன்றைய தினம் வெளிவிவகார அமைச்சின் தூதரக அலுவலகம் மூடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், எதிர்வரும் 15ஆம் திகதி முதல் வெளிவிவகார அமைச்சின் தூதரக அலுவலகத்தின் வழமையான சேவைகள் முன்னெடுக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

### இலங்கை நிலைவரம் தொடர்பில்

## பாராளுமன்ற குழுவிற்கு ஜெய்சங்கர் விளக்கமளிக்கவுள்ளார்

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் இலங்கை விவகாரம் குறித்து இந்திய வெளிவிவகார அமைச்சின் பாராளுமன்ற கலந்தாய்வு குழுவிற்கு 18ம் திகதி விளக்கமளிக்கவுள்ளார்.

இந்தக் கூட்டத்தில் இந்திய வெளிவிவகார அமைச்சருடன் முக்கிய அதிகாரிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்தக் கூட்டத்தில் இலங்கையின் பொருளாதார நெருக்கடி இந்தியாவின் அயலுறவுக்கொள்கை புதுடில்லி கொழும்பிற்கு எவ்வாறான உதவிகளை வழங்கியுள்ளது போன்ற விடயங்கள் குறித்து வெளிவிவகார அமைச்சர் பாராளும்ன்ற உறுப்பினர்களிற்கு எடுத்துரைக்கவுள்ளார். (ம-7)

## மே 9 வன்முறை மேலும் 21 பேர் கைது

(கொழும்பு)

கடந்த மே மாதம் 9 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் மேலும் 21 பேர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் 8 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அலுவலகம் தெரிவித்தது.

கடந்த மே 9ஆம் திகதி 857 வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றன.

குறித்த சம்பவங்கள் தொடர்பில் இதுவரை 2,725 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் 1,083 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

## ரயில் பெட்டிக்குள் ஆணின் சடலம் மீட்பு

(கொழும்பு)

ரம்புக்கனை ரயில் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ரயில் பெட்டிக்குள் தூக்கில் தொங்கிய நிலையில் ஆண் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

ரயிலின் இயக்கத்தை தொடங்குவதற்கு முன்னர், சாரதி உதவியாளரின் வழக்கமான பரிசோதனையின் போது அதிகாலை 4:40 மணியளவில் ரயில் பெட்டிக்குள் சடலம் கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் உயிரிழந்த குறித்த நபருக்கு சுமார் 60 வயது இருக்கும் என நம்பப்படுகிறது. அந்த நபர் வெள்ளை நிறசாரம் மற்றும் சிவப்பு கறுப்பு கலந்த நீண்ட கைச் சட்டை அணிந்திருந்தார் என்றும் அவர் குறித்த சரியான அடையாளம் இன்னும் கண்டறியப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை



வாழ்க்கைச் சிக்கல்கள் பல காரணங்களால் விளைகின்றன. பெரும்பாலும் தன் அறிவில் உள்ள குறைபாடுகள்தான் வாழ்க்கைச் சிக்கல்கள் விளையக் காரணமாகின்றன. எப்படி எனப் பார்க்கலாம். அறிவின் குறைபாட்டினால் இயற்கை நியதி தெரிவதில்லை. செயல் விளைவுத் தத்துவம் புரிவதில்லை.

தவறு செயடதால் இன்றோ, நாளையோ, அறிவிற்கோ,உடலுக்கோ துன்பம் விளையும் என்பது தெரிவதில்லை. இத்தகைய அறியாமையால் செய்த தவறுகளின் காரணமாகப் பெருக்கிக் கொள்ளும் துன்பங்களே வியாதிகளாகவும் வாழ்க்கைச் சிக்கல்களாகவும் நம்முன் எழுந்து நிற்கின்றன.

அறிவின் குறைபாட்டால் சமுதாய ஒழுங்கமைப்பு விதிகள் புரிவதில்லை. பலவ் இணைந்த கூட்டுறவு வாழ்வு எனும் சமுதாயத்தின் பராமரிப்புக்கும் காப்புக்கும் மேம்பாட்டுக்குமான விதிமுறைகளை அறியாமல் அல்லது அவமதித்து ,அதன் விளைவாகச் சந்திக்கும் துன்பங்கள் தான் வாழ்க்கைச் சிக்கல்களாக மாறுகின்றன.

பிறப்புக்கும் இறப்புக்கும் இடையில் உருளும் வாழ்வ எனும் கால கட்டத்தைக் கடந்து கொண்டிருக்கும் 'நான்' யார் என்று தெரிவதில்லை.என் மூலமென்ன? என் முடிவென்ன? என்பதை விளங்கிக் கொள்வதில்லை. தன்னிலை விளக்கம் பெற வேண்டும் என்று கூடத் தெரிவதில்லை.அதன் விளைவாக,வாழ்வின்,பிறவியின் நோக்கமாகிய வீடுபேறு என்ற உன்னதமான லட்சியத்திற்கு இசைவான வகையில் வாழும் முறையை அமைத்துக்கொள்ளாமல் , அந்த லட்சியத்திற்கு இடையூறாக , எதிரிடையாக என்னென்ன வழிகள் உண்டோ அப்படியெல்லாம் வாழ்வதால் அந்த முரண்பாடே வாழ்க்கைச் சிக்கலாக முளைக்கிறது. தன்னிலை விளக்கம் பெற்று லட்சிய வாழ்வு வாழ்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 05

அளவு வரிசையில், அவை பின்வருமாறு: (1) 24 மாநிலங்கள் அல்லது மாகாணங்கள் (Oblast), (2) மாவட்டங்கள், (3) நகர சபைகள் மற்றும் (4) கிராம சபைகள். முதல்-நிலை நிர்வாகப் பிரிவில் 24 மாநிலங்களும், தன்னாட்சி கிரிமியா குடியரசு மற்றும் சிறப்பு அந்தஸ்து கொண்ட 2 நகரங்களான - கீவ் மற்றும் செவஸ்டோபோல்ஃ சேவஸ்தபோல் ஆகியவையும் அடங்கும்.

நாட்டின் இருபத்துநான்கு மாநிலங்களும் 490க்கு மேற்பட்ட மாவட்டங்களாகவும், பிரிக்கப்பட்டுள்ளன. இம் மாவட்டங்கள் இரண்டாம் நிலை நிர்வாக அலகுகளாகும். ஒரு மாவட்டத்தின் சராசரி மக்கள்தொகை 52,000 ஆகவும் உள்ளது.

**உக்ரைன் நாடானது, இருபத்துநான்கு மாகாணங்களாகவும் ஒரு தன்னாட்சிக் குடியரசாகவும் பிரிக்கப்படடுள்ளது. பின்னர், நாட்டின் தலைநகரான கீவ் மற்றும் செவஸ்டோபோல் நகரம் ஆகிய இரண்டிற்கும் சம உரிமை வழங்கப்பட்டுள்ளது.**

**உக்ரைனிய சட்டத்தின்படி, மாகாணங்கள் அனைத்தும் மாவட்டங்களாகப் பிரித்து, உள்ளாட்சி அமைப்புகள் மூலம் நிர்வகிக்கப்படுகின்றது. இருபத்துநான்கு மாநிலங்களும் 490க்கு மேற்பட்ட மாவட்டங்களாகவும், பிரிக்கப்பட்டுள்ளன. இம் மாவட்டங்கள் இரண்டாம் நிலை நிர்வாக அலகுகளாகும்.**




உக்ரைன் மாநிலங்கள் (Oblast) பின்வருவனவாகும் (1) வாலின் (Volyn), (2) ரைவன் (Rivne), (3) சைதோமிர் (Zhytomyr), (4) கீவ் (Kyiv), (5) செர்னிஹிவ் (Chernihiv), (6) சுமி (Sumy), (7) கார்கீவ் (Kharkiv), (8) லுகன்ஸ்க் (Luhansk), (9) தோனேஸ்க் (Donetsk), (10) தினிபிராபிட்ரோவஸ்க் (Dnipropetrovsk), (11) போல்தாவா (Poltava), (12) செர்கசி (Cherkasy), (13) வின்னிதிசியா (Vinnytsia), (14) க்மெள்னிட்சிகி (Khmelnytskyi), (15) தெர்னாபில் (Ternopil), (16) லிவிவ் (Lviv), (17) சாகர்பாசியா (Zakarpatska), (18) ஐவனோ-பிரான்கிவிஸ்க் (Ivano-Frankivsk), (19) செர்னியிவ் (Chernivtsi), (20) ஓடேசா (Odessa), (21) மைகோலைவ் (Mykolaiv), (22) கீரோவராத் (Kirovohrad), (23) கேர்சன் (Kherson), (24) சாப்ரோசியா (Zaporizhzhia), என்பனவும், (a) தன்னாட்சிக் குடியரசு - கிரிமியாவும் சிறப்பு நிலை மாநகராட்சிகள் - கீவ் மற்றும் சேவஸ்தபோல் என்பனவும் ஆகும். (படத்தைப் பார்க்கவும்). இதில் 15க்கும் மேற்பட்ட மாநிலங்கள் தமது எல்லையின் ஒரு பகுதியை பிற நாடுகளுடன் பகிர்ந்துள்ளன.

18 மார்ச் 2014 அன்று கிரிமியாவின் சுயமாக அறிவிக்கப்பட்ட குடியரசு ரஷ்ய கூட்டமைப்பிற்கு இணைவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. இதைத் தொடர்ந்து கிரிமியா குடியரசாகவும் செவஸ்டோபோல் ஒரு கூட்டாட்சி நகரமாகவும் ரஷ்யாவுடன் இணைந்து கொண்டன.

மாவட்டங்களின் கீழ் இயங்கும் நகர்ப்புறங்கள் அனைத்தும், மக்கள் தொகை மற்றும் பொருளாதாரப்படி உருவாக்கப்பட்டுள்ளன. வருவாயில் குறைவான பகுதிகள் அனைத்தும் கிராமப்புறங்களாக பிரிக்கப்பட்டன. நகர்ப்புறங்களிலிருந்து, அடிப்படைத் தேவைகள் மற்றும் போக்குவரத்து வசதிகள் அனைத்தும் கிராமப் புறங்களுக்கு உருவாக்கப்பட்டுள்ளது.

பொதுவாக வாலின், ரைவன், க்மெள்னிட்சிகி, தெர்னாபில், லிவிவ்,சாகர்பாசியா, ஐவனோ-பிரான்கிவிஸ்க், செர்னியிவ் ஆகிய 8 மாநிலங்கள் மேற்கு உக்ரைன் மாநிலங்கள் என்றும் சைதோமிர், கீவ், செர்னிஹிவ், சுமி, போல்தாவா, செர்கசி, வின்னிதிசியா, கீரோவராத் ஆகிய 8 மாநிலங்கள் மத்திய உக்ரைன் மாநிலங்கள் என்றும் தினிபிராபிட்ரோவஸ்க், ஓடேசா, மைகோலைவ்,கேர்சன், சாப்ரோசியா ஆகிய 5 மாநிலங்கள் தெற்கு உக்ரைன் மாநிலங்கள் என்றும் கார்கீவ், லுகன்ஸ்க், தோனேஸ்க் ஆகிய 3 மாநிலங்கள் கிழக்கு உக்ரைன் மாநிலங்கள் என்றும் அழைக்கப்படுகின்றன.

கிரிமியா யாருக்குச் சொந்தம்?

2014ம் ஆண்டு நடந்த கிரிமியா போர் பற்றி பின்னர் பார்போம். கிரிமியா ரஷ்யாவுக்கு சொந்தமானதா அல்லது உக்ரைனுக்கு சொந்தமானதா என்பது பற்றி வ்ாதங்கள் மற்றும் பிரதிவாதங்கள் உள்ளன.

சோவியத் தலைவர் நிகிதா குருசேவ் கிரிமியாவை ரஷ்ய சோவியத் சோசலிசக் குடியரசில் (Russian Soviet Socialist Republic) இருந்து உக்ரைனிய சோவியத் சோசலிசக் குடியரசிற்கு (Ukrainian Soviet Socialist Republic) 1954 ஆம் ஆண்டு மாற்றியது முதல் கிரிமியா தொழில்நுட்ப ரீதியாக உக்ரைனின் ஒரு பகுதியாக இருந்து வருகிறது.

இதற்கான காரணங்கள் சரியாகத் தெரியவில்லை. 1954 இல் இரண்டு (ரஷ்யா மற்றும் உக்ரைன்) குடியரசுகளும் சோவியத் ஒன்றியத்தின் ஒரு பகுதியாக இருந்ததால் அது எந்தவொரு எதிர்ப்பலையையும் உண்டாக்கவில்லை. 1991 இல், சோவியத் ஒன்றியம் உடைந்த போது, மொஸ்கோ கிரிமியாவைத் திரும்பக்கோரும் என்று அனைவரும் எதிர்பார்த்தனர்.

ஆனால், அது நடக்கவில்லை. ஒரு சிறிய பெரும்பான்மையான கிரிமியர்கள் ரஷ்யாவிலிருந்து உக்ரைன் சுதந்திரம் பெற வாக்களித்தனர். மேலும் கிரிமியா புதிதாக சுதந்திரமான உக்ரைனுடன் (ஆனால் சிறப்பு சுயாட்சி சலுகைகளுடன்) இணைந்தபோது, ரஷ்யா இதை ஏற்று மதிப்பளிப்பதாக உறுதியளித்தது.

பெரும்பாலான கிரிமியர்கள் ரஷ்ய இனத்தவர்கள், உக்ரைனியர்கள் அல்லர். கிரிமியா பல நூற்றாண்டுகளாக பிராந்திய சக்திகளுக்கு இடையில் கைகளை (தமது இருப்பை) மாற்றிக்கொண்டிருந்த அதே வேளையில், கடந்த 200-க்கும் மேற்பட்ட ஆண்டுகள் அது ரஷ்யாவின் ஒரு பகுதியாகவே இருந்து வந்தது. உலகம் அதை வரலாற்று ரீதியாக ரஷ்யாவின் பகுதியாகவே பார்க்கிறது. இதனால் 2014 பெப்ரவரியில், சில கிரிமியர்கள் ரஷ்யா சார்பு பேரணிகளை நடத்தியது உலகத்திற்கு அதிர்ச்சியளிக்கவில்லை.

இதன் தொடர்ச்சியே 18 மார்ச் 2014 அன்று கிரிமியாவின் சுயமாக அறிவிக்கப்பட்ட குடியரசு ரஷ்ய கூட்டமைப்பிற்கு இணைவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. இதைத் தொடர்ந்து கிரிமியா குடியரசாகவும் செவஸ்டோபோல் ஒரு கூட்டாட்சி நகரமாகவும் ரஷ்யாவுடன் இணைந்து கொண்டன.

**உக்ரைன் தலைநகரம் கீவ்**
(Kyiv Town)

கீவ் நகரம் வட-மத்திய உக்ரைனில் டினீப்பர் ஆற்றின் குறுக்கே உள்ளது. ஜனவரி 1, 2021 நிலவரப்படி அதன் மக்கள்தொகை 2,962,180 ஆகும். கீவ் ஐரோப்பாவில் ஏழாவது அதிக மக்கள் தொகை கொண்ட நகரமாக உள்ளது. மேலும் இது கிழக்கு ஐரோப்பாவில் ஒரு முக்கியமான தொழில்துறை, அறிவியல், கல்வி மற்றும் கலாசார மையமாகும். இது பல உயர்-தொழில்நுட்பத் தொழில்கள், உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் வரலாற்றுச் சின்னங்களின் தாயகமாகவும் கீவ் நகரம் உள்ளது.

நகரத்தின் பெயர் அதன் நான்கு புகழ்பெற்ற நிறுவனர்களில் ஒருவரான கியின் பெயரிலிருந்து பெறப்பட்டதாகக் கூறப்படுகிறது. 5 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இந் நகரம் வணிக மையமாக இருந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. வரங்கியன் ஆட்சியின் (Varangian rule) கீழ், இந் நகரம் முதல் கிழக்கு ஸ்லாவிக் மாநிலமான கீவன் ரஸின் (Kie van Rus') தலைநகராக மாறியது.

**உக்ரைனின் தலைநகரான கீவ் நகரம் வட-மத்திய உக்ரைனில் டினீப்பர் ஆற்றின் குறுக்கே உள்ளது. ஜனவரி 1, 2021 நிலவரப்படி அதன் மக்கள்தொகை 2,962,180 ஆகும். ஐரோப்பாவில் ஏழாவது அதிக மக்கள் தொகை கொண்ட நகரமாக உள்ள கீவ் கிழக்கு ஐரோப்பாவில் ஒரு முக்கியமான தொழில்துறை, அறிவியல், கல்வி மற்றும் கலாசார மையமாகும்**

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளம் யுவதி...

யுவதியே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் வல்வெட்டித்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (ம-7)

## இளம் குடும்பஸ்...

என தெரியவந்துள்ளது

சடலம் மல்லாவி ஆதார வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் உடற் கூற்று பரிசோதனைக்காக முல்லைத்தீவு மாஞ்சோலை மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளது. மேல திக விசாரணைகளை மல்லாவி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## அரச ஊழியர்க...

வர்தன இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி உள்ளிட்ட எரிசக்தி நெருக்கடிக்கு தீர்வாக இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் சுட்டிக் காட்டினார். (ம-7)

## வவுனியாவில்...

நேற்று முன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் கூறினர்.

உயிரிழந்த நபர் வவுனியா நகரில் தனியாக வசித்து வந்தவர் எனவும் நாட்டாண்மை தொழில் புரிபவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை வவுனியா நீதவான் முன்னிலையில் இன்று ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-7,250)

## அரசியலில்...

செய்தேன். எவரினதும் அழுத்தங்களால் எனது எம்.பி. பதவியை நான் துறக்கவில்லை.

அரசியலில் எனது பயணம் தொடரும் என்று நான் ஏற்கனவே கூறிவிட்டேன். அந்தப் பயணம் எப்படி அமையும் என்று என்னால் வெளிப்படையாகக் கூற முடியாது.

இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைவரத்தின்படி எந்நேரமும் எதுவும் நடக்கலாம். எவருக்கும் பதவிகள் நிரந்தரம் இல்லை. இன்று உயர் பதவியில் இருப்பவர்கள் நாளை சாதாரண பதவியில் இருக்கலாம். இன்று சாதாரண பதவியில் இருப்பவர்கள் நாளை உயர் பதவியில் இருக்கலாம்.

இலங்கை அரசியலில் எதிர்வரும் காலங்கள் தீர்க்கமானதாக இருக்கும்" என்று தெரிவித்துள்ளார். (ம-7)

## புத்தர் சிலை...

அதேவேளை, சிலை வைக்கும் நிகழ்வுக்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இந்நிலையில் அங்கு கூடிய மக்கள் கடும் எதிர்ப்பினை வெளியிட்டனர். இதனால் அந்தநடவடிக்கை கைவிடப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

குறித்த எதிர்ப்பு நடவடிக்கையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள் து.ரவிகரன், க.சிவனேசன் உட்பட அரசியல் பிரமுகர்களும் மக்களும் பங்குகொண்டிருந்தனர். (ம-7,281)

## எரிவாயு...

நிறுவனம் உள்ளதாக தெரியவந்துள்ளது.

டொலர் இன்றி லிட்ரோ நிறுவனம் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதாகவும் இதன் காரணமாகவே கப்பலுக்கான கட்டணத்தை செலுத்த முடியாத நிலையில் உள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் இன்றைய தினமும் லிட்ரோ எரிவாயு விநியோகம் சாத்தியமில்லை. (ம-7)

## பிரதமர்...

தன்மையுடன் பேசுவது வரவேற்கத்தக்கதாகும் என்று இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.


நாட்டின் பொருளாதார நெருக்கடி, புதிய பிரதமர் நியமனம் குறித்த நிலைப்பாடு, பொதுமக்களின் எதிர்பார்ப்பு போன்ற விடயங்கள் தொடர்பில் அவர் மேலும் கூறியிருப்பதாவது,

இலங்கை தற்போது கடினமானதொரு சூழ்நிலைக்கு முகங்கொடுத்திருக்கின்றது. அண்மையில் நாடளாவிய ரீதியில் இடம்பெற்ற வன்முறைச்சம்பவங்கள் ஒட்டுமொத்த உலகத்தையும் அதிர்ச்சியடைச் செய்தது.

சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி உள்ளிட்ட சர்வதேச நிதிக்கட்டமைப்புக்கள் மற்றும் சர்வதேச நாடுகளுடன் இணை[illegible] முன்னெடுக்கப்ப[illegible]

# முன்னாள் நிதி அமைச்சர் பஸிலை சிறையில் அடைக்க வேண்டும்

## அத்துரலிய ரத்தின தேரர்



(கொழும்பு)

நாட்டிற்கு இழைத்த குற்றத்திற்காக முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவை சிறையில் அடைக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்தின தேரர் தெரிவித்தார்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

குடும்ப அரசியலை முன்னின்று வழி நடத்தியவர் இன்று நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாகவும், இவ்வாறான விடயங்களை செய்த ஒருவர் இவ்வாறு நாட்டை விட்டு வெளியேற முடியுமா என கேள்வி எழுப்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது அவருக்கு எந்தப் பொறுப்பும் இல்லை. ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்திவிட்டு சிரித்துக் கொண்டே வீட்டுக்குச் சென்றுள்ளார்.

இன்று நாட்டில் அவரைப் பற்றி யாரும் கதைப்பதில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

ளாதார மற்றும் சட்ட ஆலோசகர்களை நியமிப்பதற்கான தீர்மானம் உள்ளிட்ட தொடக்க நடவடிக்கைகள் திருப்தியளிப்பவையாக உள்ளன.

அதுமாத்திரமன்றி பிரதமர் தற்போதைய நெருக்கடி குறித்து நாட்டுமக்களிடம் வெளிப்படையாகப் பேசுகின்றார். இவ்வாறு பிரச்சினைகள் மற்றும் அதற்குரிய தீர்வுத்திட்டங்கள் தொடர்பில் எதிர்வருங் காலங்களிலும் வெளிப்படைத்தன்மையுடன் பேசுவது வரவேற்கத்தக்கதாகும் என்று தெரிவித்துள்ளார்.(ம-7)

## கதி...

இதனையடுத்து குழந்தை கதிரையிலிருந்து தவறி விழுந்துள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

## எரி...

பாலித கூறியுள்ளார்.

எரிபொருட்கள் இறக்குமதி செய்யப்படவில்லை எனவும், இன்று முதல் பாரிய மக்கள் வரிசை காணப்படும் என்றும் ஆனந்த பாலித தெரிவித்துள்ளார்.

95 வீதமான மக்களின்மண்ணெண்ணெய் தேவையை பூர்த்தி செய்யத்தவறினால்மண்ணெண்ணெய்க்கு கடும் தட்டுப்பாடு ஏற்படும் என ஆன[illegible] (ம-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 12/06/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1262
வெற்றி இலக்கங்கள்
மீனம் 2 1 4 6 5 9
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
திகதி 2022.06.12 சீட்டிழுப்பு இலக்கம் 3026
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
M 06 30 54 61
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 12/06/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1132
E 05 17 48 61 63

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.06.12
சீட்டிழுப்பு இலக்கம் 093
துலாம் 29 31 34 44 துலாம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2022/06/12
சீட்டிழுப்பு இலக்கம் 4784
R 8 6 1 3 1 8
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2022.06.12
சீட்டிழுப்பு இலக்கம் - 814
H 05 13 50 64
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

அத கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1585
வர்ணம்: பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2022.06.12
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,540,040/-
வெற்றி இலக்கங்கள் 14 23 66 70 V

சனிதா Shanida
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.06.12
சீட்டிழுப்பு இல: 3920
வர்ணம்: இளஞ்சிவப்பு
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,734,520/-
வெற்றி இலக்கங்கள் 15 40 55 57 Q
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி
சீட்டிழுப்பு 182
சீட்டிழுப்பு திகதி 2022.06.12 ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 22 29 42
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,605,360/-

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,777,575.60
திகதி 2022-06-12
வெற்றி வாரம் 3471
வர்ணம் ஊதா
வெற்றி இலக்கங்கள் 09 32 47 48
விருச்சிகம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 6,683,100/-

12 
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
N 12 07 08 14 26
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 935
வர்ணம் மஞ்சள்
திகதி 2022.06.12 ஞாயிற்றுக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 241,948,345/-
தொலை பேசி: 011-2 333 546-47
Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1759
நிறம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2022.06.12
தினம் ஞாயிற்றுக்கிழமை
Y 02 07 13 71
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,962,180/-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதிர்வரும் 15ஆம் திகதிக்கு பின்னர்

# எரிபொருள் விநியோகம் தடைப்படும் சாத்தியம்

## பெற்றோல் தாங்கி உரிமையாளர்கள் சங்கம்

(கொழும்பு)

**எதிர்வரும் 15ஆம் திகதிக்குப் பின்னர் எரி பொருள் விநியோகத்தில் பாரிய சிக்கல்கள் ஏற்படுமென இலங்கை பெற்றோலிய தாங்கி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**

எரிபொருளை பெற்றுக் கொள்வதற்கு முற்பணம் செலுத்த வேண்டுமென பெற் றோலிய கூட்டுத்தாபனம் குறிப்பிட்டுள்ளதாக அச்சங் கம் தெரிவித்துள்ளது.

முற்பணம் செலுத்தும் போது காத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்படுமோ என்ற அச்சம் காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆகையால் விநியோக நடவடிக்கைகள் சிக்கலடை யும் நிலைமை காணப்படுவ தாக பெற்றோலிய தாங்கி உரிமையாளர்கள் சங்கம் குறிப்பிட்டுள்ளது. (ம-7)



# சோனியா காந்தி மருத்துவமனையில்

(டெல்லி)

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர் சோனியா காந்தி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சோனியா காந் திக்கு கோவிட் அறிகுறிகள் தென் பட்டதையடுத்து மருத்துவர்களின் அறிவுறுத்தலின்படி அவர் தன்னை வீட்டிலேயே தனிமைப் படுத்திக் கொண்டிருந்தார்.

எனினும், உடல்நிலையில் ஏற் பட்ட மாற்றம் காரணமாக அவர் டில்லியில் உள்ள கங்கா ராம் மருத்துவ மனையில் அனுமதிக்கப் பட்டதாக தெரி விக்கப்பட்டுள் ளது.

மருத்துவ மனையில் அனுமதிக்கப் பட்ட சோனியா காந்தி தொடர் மருத்துவக் கண்காணிப்பில் உள்ளார் என அவரது உற வினர்கள் குறிப் பிடுகின்றனர். (ம-7)

# மருத்துவ நிபுணர்கள் சங்கம் கவலை

(கொழும்பு)

இலங்கை மருத்துவ நிபுணர்கள் சங்கம் (AMS) பொதுமக்கள் முகக்கவசம் அணியத் தேவையில்லை என்ற சுகாதார அதிகாரி களின்முடிவுகுறித்து தனது கவலைகளை எழுப்பியுள் ளது.

முகக்கவசம் அணிவது தொடர்பான விதி தளர்வு குறித்து சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் திடீர் அறிவிப்பைக் கேட்டது ஆச்சரியமாக இருப்பதாக AMS தெரிவித்துள்ளது. (ம-7)

ஆடுகள் விற்பனைக்கு

எமது பண்ணையில் வளர்க்கப்பட்ட 47 மறி ஆடுகளும் 19 கிடாய்களும் (இரண்டு மிகப் பெரிய கிடாய்கள் உட்பட) உடன் விற்பனைக்கு உண்டு. மொத்தமாக கொள்வனவு செய்யும் ஆர்வமும் திறனும் உள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.
இடம் : கெற்பெலி, உசன் (C-4486)
077 116 7585

ஆசிரியர் தேவை
தரம் 6 - 11 வரை
(விஞ்ஞானம், தமிழ், கணிதம்)
இடம் - தெல்லிப்பளை
077 834 3666

அறம் கல்வி நிலையம்
(தெல்லிப்பளை வைத்தியசாலைக்கு பின்)
புலமைப்பரிசில் வகுப்பு
தரம் - 3,4 (11856)
(உயர்ந்த பெறுபேறுக்கு உத்தரவாதம்)
077 801 6943

IELTS DMI COMPUTER EDUCATION 0777 17 35 17
#Student VISA மூலம் வெளிநாடு செல்வோருக்கானது
# Unique Test Tips
# 40 hrs with free 4 mock exam
# Latest course Material (Book 16)
Academic or General
IELTS Life Skills - A1
திருமணம் செய்து UK செல்வோருக்கானது
DMI , British Council இன் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு மையமாகும்
யாழில் ஆங்கிலக்கல்விக்கு No.1 பயிற்சி மையம்
DIPLOMA IN ENGLISH
புதிய பிரிவு ஆரம்பம் 15/6/2022 Wed 9:30 am
SPOKEN ENGLISH நேரடி வகுப்புக்களாக
German - Germany ,Swiss நாட்டுக்கு செல்வோருக்கு Deuctsch
French - France நாட்டுக்கு செல்வோருக்கு (C-4481
DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் No.113, கஸ்தூரியார் வீதி 0777 24 07 07 021 222 4403
தெல்லிப்பழை 021 226 2470 0777577333
சாவகச்சேரி 021 227 0775 0777227074
சுன்னாகம் 021 224 1970 0776032300
மானிப்பாய் 021 225 6665 0761354503
கிளிநொச்சி 021 228 5655 0776398096

பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு
A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் (C-4410)
V2 TRAVELS
எமது கிளைகள்
● பயிற்சிக்கால ஊக்கத்தொகை -20,000/-
● பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
● பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
● வேலையின்போது ஆரம்ப சம்பளம் -25,000/-
49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம். 0777-068-777

UK STUDENT VISA
IELTS தேவையில்லை
(நிபந்தனைக்குட்பட்டது)
DEGREE முடித்தவர்களுக்கு 1 வருட MASTER DEGREE மற்றும் வேலைவாய்ப்புக்கள் (C-4410)
CIMS COLLEGE 0777-068-777

லக்சுமி மணி மண்டபம்
விளையாட்டரங்க வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
உங்கள் உறவுகளின் திருமண விழாக்கள், பூப்புனித நீராட்டு விழாக்கள், பிறந்தநாள் விழாக்கள் மற்றும் கலந்துரையாடல் போன்றவற்றை மிகச் சிறந்த முறையில் மேற்கொள்வதற்கு முற்றிலும் குளிரூட்டப்பட்ட லக்சுமி மணிமண்டபத்தை இன்றே நாடுங்கள். (11863)
077 536 0763
076 130 1034

நீர்க்கசிவினை நிரந்தரமாக நிறுத்துவதற்கு
உங்கள் வீடுகள், கட்டடங்கள், கோவில்கள், கடைகள் (மொட்டை மாடிகள், தண்ணீர்த்தொட்டி, வில்லுமண்ட பம், முகட்டுக்கூரைகள், வெளிப்புறச் சுவர்கள், மேல் மாடி குளியல் அறைகள், நீரோடிகள்), வெடிப்புகள், நீர்க்கசிவுகளை உத்தரவாதச் சான்றிதழுடன் நிவர்த்தி செய்து தருகிறோம்.
மேலும் மாபிள் பதிக்கப்பட்ட குளியல் அறைகளில் ஏற் படும் நீர்க்கசிவுகளை மாபிளை உடைத்து சேதப்படுத் தாமல் சிறந்த இரசாயனங்கள் மூலம் நீர்க்கசிவினை நிறுத்தித் தருகிறோம்.
1 சதுர அடி ரூ. 200/- முதல்
Skyline Water Proofing
No.89, Old Park Road, Jaffna, Sri Lanka.
077 722 0095/076 663 6481/021 221 4994
கிளிநொச்சி/முல்லைத்தீவு - 077 741 4960
வவுனியா / மன்னார் - 077 279 0743 (11845)

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை
அசாதாரண சூழ்நிலையிலும் அனைத்து நாடுகளுக்கும் வழமைபோல் 100% பாதுகாப்புடன் எமது சேவைகள் நடைபெறுகின்றது.
அருள் குளோபல் எக்ஸ்பிரஸ்
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 6113
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
இல.01, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 3536
அருள்
இ.போ.ச டிப்போ எதிரில், பருத்தித்துறை.
இல.01, தபால் கந்தோர் வீதி, சாவகச்சேரி.
இல.01, பெற்றோல் செற் எதிரில், நெல்லியடி.
தொ.பே:- 076 443 1576 (C-4480)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.06.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.